1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Telegrams:
"CATHOLIC PRESS"
JAFFNA.

Telephone:
NO. 100

# சத்தியவேத பாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

76-ம் புத்தகம் 40-ம் இல. யாழ்ப்பாணம் 1951-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 11-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10

## தாய்மாருள் சிறந்த வீரத்தாய்

(முன்தொடர்ச்சி)

....பாவமும் புண்ணியமும் ஒன்றையொன்று எதிர்த்து நின்று போராடுகின்றன. ஆம்! அது ஓர்போர்க்களம். புண்ணியத்தின் வெற்றிக்காகப் போராடப் புனிதனை அனுப்புகின்றாள் எம்வீரத்தாய். சுக்குநூறுகஉடையும் இருதயத்தினை அழுத்திப் பிடித்துக்கொண்டு தேவமைந்தனை அனுப்புகிறாள். சிலுவைப்போரில் பாவிகளாகிய மக்களுக்காக அவரும் தம்உடம்பின் கடைசிச்சொட்டு இரத்தம்வரை அர்ப்பணிக்கிறார். அந்தோ! அதோ ஒருசிலுவை வீரமைந்தனின் குருதியினைக் கொள்ளைகொள்ள—மனிதனைப் பாவத்தின் பிடியினின்று விடுவிக்க—வருகிறது. அமைதிநிலவும் முகம், அருள்கொழிக்கும் கண், உலகிற்காக இரங்கிவாடும் உடலம், இத்தகைய கடவுட்கோலத்தினருகேவந்து காட்சியளிக்கிறது. காலில் கல்தட்டிய காயம் காணப்பொறாத தாய்மனம்—மகனது வாட்டங்கண்டு அனலிடுமெழுகென உருகும் பெற்றதாய்மனம்— மகனது மகிழ்ச்சியில் மகிழும்தாய்மனம் — மகனின்சிரத்தினில் மணிமுடிதரித்துக் காணஏங்கிய அருமருந்தன்ன அன்னையுள்ளம் மகனின் அமைதிமுகங் கண்டு அமைதியுறுகிறது.

அந்தோ! பாவிகள் அப்பரிசுத்தரது திருக்காலையும்கையையும் சிலுவையில் பதியவைத்துப் பதைபதைக்க ஆணிகொண்டு அறைகின்றனர். ஐயோ! எள்ளிநகையாடி முண்முடியை அழுத்துகின்றனர். தாய்மனம் பதைக்கிறது. தாயின் இதயமலரில் ஆயிரம்தேள் கொட்டியது போல—ஆயிரம்முட்களை அறைந்ததுபோல் வேதனைகிளம்புகிறது. மகனின் உடற்குருதிகண்டு அவள்குருதி கொதிக்கிறது. நமதுவீரத்தாய் வியாகுலமாதாவாக மாறுகிறாள். தலைசாயும் தறுவாயிலும் மக்கள் மாட்டு அருள்கொண்ட அண்ணல் தமதுதிருவாய்மலர்ந்து 'ஆண்டவனே! அவர்கள்செய்வது அவர்களுக்கே தெரியாது; அவர்களை மன்னித்தருளும்' என அழுதரற்றி மன்றாடினார். அன்னையும் கண்களில் நீர்ததும்ப இன்னும் மன்றாடி நிற்கின்றாள்.

மகனின்உடற்குருதிகொண்டு மக்களது பாவக்கறைகளின்மேல் தெளித்துப் பரிசுத்தஞ் செய்கிறாள் நம்வீரத்தாய். எம்தாய் தனதுகண்ணீரால் பாவிகளைநீராட்டி அவர்களுக்கு விடுதலையளிக்கிறாள். கணவனுக்காகத் தன்னுயிர்நீத்த தமிழ்ப் பெண்மணியல்ல அவள். மன்னனுக்காகத் தன்மகனுயிர் அளித்த மறப் பெண்மணியுமல்லஅவள். ஒருதனிச் சமுதாயத்துக்காகஉயிர்நீத்தடானயாஎன்ற கொறில்லாப் பெண்ணுமல்லஅவள். உலகமக்கள் மீட்சியுற்று மாட்சியடைய மைந்தனை மக்களுக்களித்தாள். மண்ணுலக, விண்ணுலக மன்னனை மைந்தனகப் பெற்றபாக்கியம் மரியன்னையல்லது யார்பெற்றார்? துன்பமுற்றவரே துன்பநிலையினை உணரவல்லவர் என்பதற்கியைய வியாகுலமாதா மக்களின் அவதியினைக் கண்ணுற்றுக் கண்ணீர்உகுத்துத் தேவமைந்தனிடம் மன்றாடிநிற்கின்றாள். நமதுமெய்மறையானது தெய்வத்துக்கு அடுத்தபடியில் சிருஷ்டிகளில் மிகஉன்னதமானவளாக மரியன்னையை மதித்து வருடத்தில் பலதிருநாட்கள்நடாத்தி அவளின் மாபெரும்புகழை உலகில் பரப்புகின்றது. அவைகளில் அவளது வியாகுலத்தின் தாயான—வீரத்தாயான வெற்றித்திருநாளையும் வருடத்தில்இருமுறை கொண்டாடுகின்றது. ஒன்றுதபசுகாலத்தின் ஆறும்வெள்ளிக்கிழமை. இன்னொன்று புரட்டாசி மாதம் 15-ம்தேதிவரும் திருநாள். தேசசேவைக்காக, மன்னனின்பெருமைக்காக, தம்மைந்தரைப் போருக்குஅனுப்பி மகிழ்ந்த வீரத்தாய்மாரைக் கொண்டிருந்தது அக்காலப் பாரதநாடுஎன இக்காலப்பாரதமக்கள் ஆரவாரித்து, அப்புகழை இசைபரப்பிப் பெருமைகொழிக்கின்றனர். இதோ உலகசமுதாயத்தின் பாவமீட்புக்காக வியாகுலஅன்னையாகும் வீரத்தாய் தனது ஏகமகனைச் சிலுவையில் பலியிட்டு இன்று பாவஉலகின் வீரத்தாயாய் விளங்குவதை நம்திருச்சபை பேரிகைமுழக்கி அகிலஉலகமக்களுக்கும் அறிவிக்கின்றது. பாரதவீரத்தாயின் வீரமும் பெருமையும் ஒருசிறு சமுதாயத்துக்குமட்டுமே புகழ்பெற்றுத்தருவது. இந்தவீரத்தாயின் வீரமும்பெருமையும் அகிலசமுதாயத்தையுமே அகமகிழச் செய்யவல்லது.

(ந-ஆ)

## ஜசிந்தாவின் மணிமொழிகள்

(முன்தொடர்ச்சி)

அந்தக்கிராமத்துச் சிறுவர்கள் அவளைப் பார்க்கவந்தால் அவர்கள்உள்ளத்தில் இந்த நேசத்தை உண்டாக்கமுயல்வாள். தன்னைவிட வயதிற்குறைந்த சிறுவர்சிறுமிகளை மாத்திரம் தன்அறைக்குள் வரவிடுவாள். அவர்களுக்குச் செபங்களும், பாட்டுகளும் கற்பிப்பாள். படுக்கையிலிருந்துகொண்டே அவர்களுடன்விளையாடுவாள். அவர்கள்வருகையில் அவள்எழுந்திருந்தால், தரையில் உட்கார்ந்து விளையாடுவாள். பின்புஅவர்கள் செபமாலை செபிக்கும்படிசெய்து, "இனி ஒருபோதும் ஆண்டவரை மனநோகப் பண்ணக்கூடாது; அப்படியானால்தான் நரகத்துக்குப் போகமாட்டீர்கள்"எனப் புத்தி சொல்வாள்.

சிலசிறுவர்கள் காலைநேரம் முழுவதும் அல்லது மாலையில் நெடுநேரம் அவளுடன் இருப்பார்கள். அந்தஊர்ப்பெண்களும் அவளைப்பார்க்கவந்து, தங்கள்குழந்தைகளை அவளுடன் விளையாட விட்டுவிட்டு, அவள் படுக்கையருகில் உட்கார்ந்து தைத்துக்கொண்டிருப்பார்கள். பிறர்சிநேகத்துக்கோ அல்லது வேறுஎந்தப் புண்ணியத்துக்கோ விரோதமான வார்த்தை எதுவும் அவர்கள் வாயில்வந்தால், அவள்சாந்தமாய்க் கண்டிப்பாள். பலர் வெகுதூரத்திலிருந்தும் அவளைப் பார்க்கவருவார்கள். அவளுடைய மாறாத பொறுமையைப் பார்த்து அவர்கள்அதிசயிப்பார்கள். அதிக வேதனைப்பட்ட போதிலும் அவள் முறையிட்டதில்லை. ஆத்திரப்படாமல், அவள் அவர்களுடைய கேள்விகளுக்குச் சுருக்கமானபதில் கூறுவாள். "இந்தச்சனங்களோடுபேசி என்தலை நோகிறது; இப்பொழுதுநான் ஓடிஒளிக்கமுடியாது; ஆண்டவருக்காகப் பரித்தியாகங்கள் செய்யச் சந்தர்ப்பங் கிடைத்திருக்கிறது"என்று லூசியாவங்தும் சொல்வாள். அவளருகில் இருப்பதே அநேகருக்கு ஆனந்தமாய் இருந்தது. பரலோக உணர்ச்சியை அவர்கள்உள்ளத்தில் உண்டாக்கியது.

நாளடைவில் அவளதுநோய் அதிகரித்தது. அவளை ஆஸ்பத்திரிக்குக்கொண்டுபோகவேண்டுமென டக்றர்கூறினார். இதை ஜசிந்தா எதிர்பார்த்திருந்தாள். தன்தாயையும், லூசியாவையும் விட்டுப்பிரியவேண்டும்; ஆஸ்பத்திரியில் அவள்தனியேவிடப்படுவாள்என்று ஏற்கனவே அன்னைஅவளுக்கு அறிவித்திருந்தாள். லூசியா! நான் அங்கு தனியே வேதனைப்படப் போகிறேனே, நீமாத்திரம் வரக்கூடுமானால் நலமாயிருக்கும்"என அவள் கூறினாள். ஊரெம்என்ற இடத்திலிருந்த ஆஸ்பத்திரியில் அவளைவைத்தார்கள். பெற்றோர் அவள் சாப்பாட்டுக்குக் கொஞ்சப் பணம்கொடுக்கவேண்டுமென்ற நிபந்தனையின்பேரிலே அங்கு அவள் ஏற்றுக்கொள்ளப்பட்டு 1919-ம் ஆண்டு ஆடி, ஆவணி மாதங்களில் அங்கு தங்கியிருந்தாள்.

தாய் அவளைப்பார்க்க வரும் போதெல்லாம் லூசியாவையும் கூட்டிவரும்படி ஜசிந்தா கேட்டுக்கொண்டாள். இருசிறுமியரும் தனியேஇருக்கையில் தங்கள்உள்ளத்தின் விசாரங்களைப் பற்றிப் பேசுவர். "சர்வேசுரனையும், மரியாயின் மாசற்றஇருதயத்தையும் அவள்நேசித்தமையாலே பாவிகளுக்காகவும், பாப்பானவருக்காகவும் தன்வேதனைகளைச் சந்தோஷத்துடன்சகித்து ஒப்புக்கொடுத்தாள். வேறு எதையும் பற்றி அவள் பேசமாட்டாள்"என லூசியா கன்னியாஸ்திரி கூறுகிறாள்.

நோய் குணமாகவில்லை. இருமாதங்களுக்குப்பின் அவள்வீட்டுக்குத் திரும்பினாள். அவளின் இடதுபக்கத்தில் குழாய்போன்ற ஒருபுண் உண்டாகி மிகுந்த வேதனையை அவளுக்கு உண்டுபண்ணியது. ஒவ்வொருநாளும் அதைக்கழுவிக் கட்டவேண்டும். சகிக்கமுடியாதவேதனை. ஆனால் அவள் முறையிட்டதில்லை. பார்க்கவந்தவர்களின் கேள்விகளுக்குப் பதில்சொல்வதே பெரும்வேதனையாயிருந்தது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க செய்திகள்

*United States Information Service, COLOMBO.*

## சமயத்தின் அவசியம்

— வாஷிங்ரன்

"ஆண்டவனே! நம்மனைவரையும் ஆட்கொண்டு அருள்பவன் என்ற நமது சமய நம்பிக்கையே உயர்ந்ததாகும்; அந்த நம்பிக்கையில்தான் சோவியற் எதேச்சாதிகாரத்தை எதிர்த்துநிற்கும் சுதந்திரதேசங்களின் மிகமிக மகத்தான வல்லமையின்மூலாதாரம் தங்கியிருக்கிறது." இவ்வாறு ஜனாதிபதி ட்றூமன் அவர்கள் இங்குநடந்த அமெரிக்க சமயதலைவர்கள் கூட்டத்திற் பேசுங்கால் குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது: "மற்றொரு மகாயுத்தம்மூள்வதை எப்பாடுபட்டாகிலும் நாம் தடுக்கவேண்டும். மற்றொருயுத்தம் முன்னர் நாம் கண்டதிலும இன்னும் மகாபயங்கரமானதாய் இருக்கும். சமாதான புனித போராட்டத்தில் உலக கிறீஸ்துவசபைகள் முக்கியபங்கு ஏற்கக்கூடும். இன்று மனிதனின் பிரயாசைமுழுவதுமே அபாயத்துக்கு உட்பட்டுள்ளது. ஒருபுறம், தெய்வமே இல்லைஎன்று நாஸ்திகக்கூத்தாடும் கம்யூனிஸ்த எதேச்சாதிகாரத்தை எதிர்த்துநிற்க வேண்டியிருக்கிறது. மறுபுறம், மறு மகாயுத்தத்தைத் தவிர்க்கவேண்டியிருக்கிறது. மக்களை மாக்களாக்கும் யுத்தம் கூடாது. இதுவே நமக்குமுன் உள்ள பிரச்சினை. நாம் எந்தஉன்னத விடுதலைலட்சியங்களுக்காக வாழ்கின்றோமோ அவற்றைக்கைவிட்டுச் சோவியற் கம்யூனிஸத்துக்குப் பணிய முடியாது. இந்த இக்கட்டானவேளையில் நமக்குக் குன்றாதவல்லமையின் ஊற்றாகஇருப்பது தெய்வத்தின் தலைமையை நாடும் நம்பிக்கையேயாகும். சமாதானலட்சியம் சித்திபெறும்படி அனைவர்க்கும்தந்தையாம் இறைவன் துணையை நாம் எவ்வித வேறுபாடும் இன்றி ஒன்றுபட்டு நாடவேண்டும்."

## கம்யூனிஸத்தின் கொடுமைகள்

— நியூயோக்

நாடாளும்பிடியைப் பலப்படுத்திக் கொள்வதற்காகச் சீனக் கம்யூனிஸ்தர்கள் கையாளும் ஈவிரக்கமற்ற உபாயங்களைச் சீனமக்கள் இப்போது உணர்ந்துகொண்டார்கள்என்று "நியூயோக் ஹறல்ட் டிறிபியூன்" பத்திரிகையின் ஹொங்கோங்நிருபர் செல்வி மார்கறெற் ஹிக்கின்ஸ் தகவல் தருகின்றார். அவர் மேலும் எழுதுவதாவது: "இரும்புமுஷ்டியைப் பட்டுக்கைக் குட்டையால் மறைத்து, ஆசை வார்த்தைகளை அள்ளி இறைத்துத்தான் கம்யூனிஸ்தர்கள் ஆகியில் பதவிக்குவந்தனர். இந்தச் சூழ்ச்சியை இப்போது சீனமக்கள் கண்டுகொண்டார்கள். கம்யூனிஸ்தர்கள் தங்களுக்கு வேண்டாதவர்களைக் கும்பல் கும்பலாக வதைசெய்கின்றார்கள். அத்தோடு பயங்கரமான ஒற்றர்படை வைத்து மக்களுக்குக் கொடுமைசெய்கிறார்கள். இந்தஒற்றர்வேலை வயதில் பெரியவர்களுக்கு விரோதமாகச் சிறுபிள்ளைகளையும் கிளப்பிவிட்டுள்ளது. கம்யூனிஸ்தஆட்சியை எதிர்த்துக் "கொறில்லா"ப் போர்வீரர்சிலர் இன்னும் போராடுகிறார்கள் என்றாலும், அயலார் உதவிஇல்லாமல் அடக்குமுறையாளரை அகற்றமுடியாதென்று ஆயிரக்கணக்கான சீனர்கள் நம்பிக்கையை இழந்துள்ளனர்.

"கம்யூனிஸம் என்றால் என்னவென்பதைக் கடைசியாக மக்கள் உணருவதற்குத் தலைப்பட்டுள்ளனர். சீன விவகாரத்திலே பயங்கரமான திட்டம் என்னவென்றால், கம்யூனிஸ்தர்களின் பொய்வேலையையும், கபடதந்திரங்களையும், ஆசைவார்த்தைகளையும் நெடுங்காலம் மக்கள் நம்பிப்போய், இங்கே மஸ்கோ கால்ஊன்றுவதற்கு இடங்கொடுத்துவிட்டார்கள் என்பதுவே. உலகின் இந்தப்பாகத்திலே, கம்யூனிஸ்தமுறையைப் 'பட்டால்தெரியும்' என்றநிலைமை ஏற்படுவதற்குமுன் மக்கள்புரிந்துகொள்ளுகிறார்கள் இல்லை. மக்கள் விளங்கிக்கொள்ளும்போது, காலம்கடந்துவிடுகிறது. ஆபத்தைத் தடுக்க முடிவதில்லை. கம்யூனிஸ்தர்கள் புகுந்துவிடுகிறார்கள். பிறகு அவர்களின் அடக்குமுறைக் கொடுங்கோல் தொடங்குகிறது."

## ஒத்துழைப்பார்களா?

— நியூயோக்

"ருஷியர்கள் ஒழுங்காகஒத்துழைத்தால், உலகில் ஆயுதபரிகாரணம் நாளைக்கே ஆரம்பமாகக்கூடும்" என்று "நியூயோக் ரைம்ஸ்" தனது தலையங்கத்தில கூறுகிறது. தற்போதைய அகிலஉலக நெருக்கடியைப்பற்றிக் கூறுகையில், ஆயுதசக்தியைப் பொறுப்பேற்பதில் அமெரிக்காவுக்குள்ள "வேண்டா வெறுப்பு" வேறெந்தநாட்டுக்கும் கிடையாது; ஆயுததளவாடங்களைப் பெருக்குவதை அமெரிக்காவைக்காட்டிலும அதிகம்வெறுக்கும் நாடே இல்லை என்றும் அது குறிப்பிடுகிறது. மேலும் அது கூறுவதாவது:- "எனினும், கம்யூனிஸ்த எதேச்சாதிகாரம் இடையறாது பயமுறுத்துவதினால், அதற்கு எதிராகச் சொந்தப்பாதுகாப்புக்குப் போதியளவு ஆயுதமேந்துவதைத் தவிரச் சுதந்திரஉலகத்திற்கு வேறுவழி கிடையாது. அமெரிக்க வெளிநாட்டு மந்திரி அச்சிஸன்அவர்கள் அமெரிக்காவின் சமாதானஆர்வத்தைச் சென்றபுதனன்று மீண்டும் வலியுறுத்தியிருக்கிறார். நமது வெளிநாட்டுக்கொள்கை பற்றிப் பேசும்பொறுப்புடைய ஜனாதிபதி ட்றூமனும், மற்றும்பலரும் அமெரிக்காவின் சமாதான ஆர்வத்தைப்பற்றித் திரும்பத்திரும்ப எடுத்துக்கூறியுள்ளனர். ஆயுதமேந்தும் பொறுப்பை நம்மைப்போல வெறுக்கும் நாட்டினர் வேறுகிடையாது. 30 ஆண்டுகளுக்கு முன் இந்தப்பொறுப்பைத் தட்டிக் கழித்தோம். இப்போது நாம் அதைப் பற்றிப் பெருமைப்படாமல் பொறுப்பேற்க நேரிட்டிருக்கிறது.

"யுத்தத்தாலே அமெரிக்காவில் எவருக்குமே யாதாமோர் லாபமும் கிடையாது. அதற்கு ஆயத்தம் செய்வதினாலும் எவருக்குமே ஒரு பயனும் இல்லை. தற்காப்புக்கு ஆயத்தமாவது—அதாவது யுத்தத்தைத்தவிர்க்க ஆயத்தமாவது என்பதில் இந்தநாட்டு வாலிபர்களுக்கு நன்மைபயக்கும் ஆண்டுகள் நஷ்டமாகின்றன. அதனால் ஒவ்வொருவரும் கொடும்வரிகளுக்கு ஆளாவர். நமக்குப் பிறரை அடக்கி ஆள வேண்டும்என்ற ஆசை உண்டா? என்றால் அதுவும்இல்லை. ஆனால், நம்மைப்பிறர் அடக்கியாள விடக்கூடாது என்று நிச்சயப்படுத்திக் கொள்வதில் நமக்கு ஆசைஇருக்கிறது. திரு. அச்சிஸன் அவர்கள் சொல்வதுபோலப் "பலமானநிலைமைகளை"ப் படைக்க நாம் விரும்புகிறோம். கம்யூனிஸ்த ஆட்சிக்குட்பட்ட நாடுகளின் நல்லெண்ணத்திலே நாம் நம்பிக்கை வைப்பதற்கில்லை. ஆறு ஆண்டுகளுக்குமுன் அந்தநல்லெண்ணத்தை நம்பலாம்என்ற நிலைமையில் நமது படைப்பலத்தைக் கலைத்தோம். இப்போது அந்தநிலைமை மாறியிருக்கிறதென்றால் — இப்போது நாம் பாதுகாப்பை நிறுவிவருகிறோமென்றால், அது நம்முடைய தவறோ அல்லது நமது கூட்டாளிகளுடைய தவறோ அல்லவே. உலகில் ஆயுதபரிகாரணம் நாளையேஆரம்பமாகும், ருஷியர்கள்மட்டும் அந்தரங்கசுத்தமாக அதற்கு ஒத்துழைக்கவேண்டும். கம்யூனிஸ்தர்கள் தங்கள் ஆக்கிரமிப்புச்சக்தியைக் கைவிட்டால், அவர்களை அதிக்

கும்சக்தியைத் திரட்டுவதைச் சுதந்திரதேசங்கள் சந்தோஷமாகக் கைவிட்டுவிடும்.

## ஒலிபரப்பு நிலையங்கள்

—ஹோம்ஸ்பிறிங்ஸ்

உண்மைத்தகவல்களை உலகெங்கணும் பரவச்செய்ய ஐந்துபுதிய ஒலிபரப்பு நிலையங்களை அமெரிக்கா நிர்மாணித்துக்கொண்டிருக்கிறது. இவற்றில் இரண்டு அமெரிக்காவிலேயே இடம் பெறுகின்றன. இவைகள் இப்போது பாவிப்பிலுள்ள ஒலிபரப்புநிலையங்களைக் காட்டிலும் பன்மடங்கு கூடுதலான சக்திபெற்றனவாய் இருக்குமென அமெரிக்க துணைக்காரியதரிசி எட்வாட் பாறட் அறிவிக்கிறார். செய்திப் பத்திரிகையாளரின்சங்க மகாநாடொன்றில் பேசியபோதுதான் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். கம்யூனிஸ்த வண்டவாளத்தை இரும்புத்திரைக்கு உள்ளேயுள்ள மக்களுக்கும் உணர்த்துவதே இந்தஏற்பாட்டின் நோக்கமாகும். அமெரிக்காவைப்பற்றிக் கம்யூனிஸ்தர்கள்கட்டிவிடும் புளுகுகளை அம்பலப்படுத்தி, அதேசமயம் சுதந்திரமாந்தரின் நண்பன் அமெரிக்காவே எனபதை எடுத்துச்சொல்லவே இந்த ஏற்பாடாகும்.

## உங்களுக்குத் தெரியுமா?

**1. அதிக ஞாபகசக்தி உள்ள விலங்கு எது?**

யானை ஒருபோதும் எதையும்மறப்பதில்லை. யானைக்கு நீண்டகால ஞாபகம் இருக்கிறதென்பதும், தனக்குத் தீமைசெய்தவனை அது பல ஆண்டுகள் கழித்தும் பழிவாங்கியுள்ளதென்பதும் உண்மையே. தனக்குத் தீமைசெய்தவனை அது நீண்ட காலத்தின்பின அடையாளம் கண்டுபிடித்ததைப் பற்றிப் பலகதைகள் வழங்குகின்றன. தனது எசமான் இருளில் வழிதெரியாது தடுமாறியபோது குதிரைகள் வழியைஅறிந்து அவனைக் கொண்டு சென்ற வரலாறுகள் பலஉள. கழுதைகளும், குதிரைகளும் இடங்களையும், செயல்களையும் நன்கு ஞாபகத்தில் வைத்திருக்கின்றன. கழுதை மூட்டுத்தனமுடையதாய் இருக்கலாம். ஆனால், மூடமன்று. பலர் இருளில் அறிந்துசெல்லமுடியாத வழியை அது அறிந்து செல்லமுடியும். வழியை அறிந்து செல்வதில் நாய்களும் அதிக ஞாபகமுடையன. அவைகள் எப்பொழுதும் எதிரியையும், நண்பனையும் அடையாளங் கண்டுபிடிக்கும். பறவைகளுள் வளர்க்கும்புறா ஞாபகசக்திக்குப் பேர்பெற்றது.

**2. இயற்கை அறிவு என்பது என்ன?**

விலங்குகள், பறவைகள், ஊர்வன, பூச்சிகள் முதலியனவெல்லாம் சில அரியசெயல்களைச் செய்கின்றன. இது திறமையன்று. இயற்கை அறிவு. நாய் படுப்பதற்குமுன் பலமுறை வட்டமாகச் சுழன்றுவருகிறது. எங்கிருந்தாலும் நாய்கள் இவ்வாறு செய்கின்றன. அது இயற்கைஅறிவு. நாய்கள்எல்லாம் காட்டுநாய்களாய் இருந்தபோது எதிரிகள் அண்மையில் உண்டோஎன்று சுற்றிலும் சுழன்று வந்து பார்த்தபின் படுத்துவந்தன. இப்பழக்கத்தையே நாய்கள் இன்றும் செய்துவருகின்றன. சிலபறவைகள் குளிர்காலம் வரும்போது வெப்பநாடுகளுக்கு ஓடிச்செல்கின்றன. கீரைவகைகளில் முட்டையிடும் வண்ணாத்திப்பூச்சி அவற்றிலே முட்டை இடுகிறது. தேனீ கால்களிலுள்ளபைகளில் பூந்தாதை நிரப்பிக்கொண்டு கூட்டுக்குப் பறந்துசெல்கிறது. இவைகள் இயற்கைஅறிவாற் செய்யப்படுகின்றன. கீரையில் முட்டையிடும் வண்ணாத்திப்பூச்சி கல்லில் அல்லது மரத்தில் முட்டையிடமாட்டாது. தேனீக்களைப் பூந்தாதைஎடாமல் செய்யமுடியாது. இவ்வுயிர்களுக்குத் தாங்கள் ஏன் இப்படிச் செய்வதுஎனத் தெரியாது. தங்கள்கூட்டம் இவ்வாறு செய்தபடியால் தாங்களும் இவ்வாறு செய்கின்றன.

**3. விட்டிற் பூச்சிக்கும் வண்ணாத்திப்பூச்சிக்குமுள்ள வேறுபாடு என்ன?**

விட்டிற்பூச்சிக்கும், அந்துப்பூச்சிக்கும் வண்ணாத்திப்பூச்சியிலும்பார்க்கப் பாரமான உடலுண்டு. விட்டிற்பூச்சி பகலிற் பறப்பதில்லை. வண்ணாத்திப்பூச்சியின் கொம்புநுனியில் குமிழ் உண்டு. வண்ணாத்திப்பூச்சி ஆறியிருக்கும்போது அதன் இறக்கைகள் சரிந்து நிற்கும். விட்டிற்பூச்சிகளும் அந்துப்பூச்சிகளும் ஒரேவகையின.

**4. மீன்கோத்திப் பறவைகளின் கூடு எவ்வகையினது?**

மீன்கொத்திப்பறவை தான் உண்ணும் மீன்களின்முட்களைக் கூடு கட்டப் பயன்படுத்துகிறது. முட்கள் மிகத் திறமையாக அடுக்கப்படுகின்றன.

**5. கூழ்முட்டை ஏன் நீரில் மிதக்கிறது.**

கூழ்முட்டையினுள் வாயு உண்டாகி முட்டைக்கோதிலுள்ள நுண்ணிய துவாரங்களால் வெளியேறுகின்றது. இதனால் முட்டையின்பாரம் குறைய அது மிதக்கிறது.

## நாளுசங்கதிகள்

—ஆஸ்திறேலியாவிலே கம்யூனிஸத்தைச் சட்டவிரோதமானதாய் ஆக்கிவிடுமாறு பொதுச்சன சம்மதவாக்குக் கேட்டதில் காரியம்தோல்வியாகிவிட்டது. அதனால்அரசாங்கம் தனது கம்யூனிஸ்ததடைவேலையைக் கொண்டு நடத்துவதற்குப் பதில்வழிவகைகளை உடனேதானே ஆலோசிக்குமென்று அதன்பிரதமரான திரு. றொபேட் மென்சியெஸ் தெரிவித்திருக்கின்றார்.

—பொதுத்தேர்தல் முடிந்ததும், பிரித்தானிய புதியபாராளுமன்றம் இம்மாசம் 31-ந்திகதி புதன்கிழமை முதன்முறையாகக் கூடவிருக்கிறது. பின்னர் வருகிற கார்த்திகைமாசம் 6-ந்திகதி செவ்வாயன்று ஆறாவதுஜோர்ஜ் அரசர் புதியபாராளுமன்றத்தைச் சம்பிரதாயமுறைப்படி ஆடம்பரமாகத் திறந்துவைப்பார்.

—ஐரோப்பாவிலும் முஸ்லீம்நாடுகளிலும் பலவித கஷ்டங்களுக்குள்ளாய் வருந்துகின்ற நான்குலட்சம் யூதர்களுக்கும் கஷ்டநிவாரணம்அளிப்பதற்கும், அவர்களை இஸ்றாயேல் நாட்டில் குடியேற்றுவதற்குமாக அடுத்துநிகழும் 1952-ம்ஆண்டிலே அமெரிக்க யூதர்களின் கம்மிற்றி 2 கோடியே 35 லட்சம்டலர் செலவிடவிருக்கின்றது.

—தற்போது ஸ்பானியதேசம் 20 லட்சம் போர்வீரர்களைக்கொண்ட ஓர் சேனையை உடையதாய்இருக்கிறது. மேற்குஐரோப்பாவின் பாதுகாப்புக்கு இது மதித்தற்கரிய ஓர் பலமாகும். ஆனால், ஸ்பெயினுக்கு இராணுவ-பொருளாதாரஉதவிகள் அவசியம் வேண்டியிருக்கின்றன. இவைகளும் அமெரிக்காவிலிருந்துதான் கிடைக்க வேண்டும்.

—'கன்பெறா' இனத்தைச் சேர்ந்த பிரித்தானிய ஜெற்வெடிகுண்டுவிமானம்ஒன்று அயர்லாந்துதேச பெல்பாஸ்ற்நகரிலிருந்து 4 மணித்தியாலம் 18 நிமிஷம் 24 செக்கனில் அத்திலாந்திக் சமுத்திரத்துக்குமேலாக முன்னில்லாத அதிமிகவேகத்தில் பறந்து நியூபவுண்ட்லாந்தைச்சேர்ந்த கண்டர்நகர்போய்ச்சேர்ந்து உலகப்பிரசித்திபெற்றிருக்கின்றது.

—றோமாபுரியில்நிறைவேறும் சகல பூசைகளிலும் பாப்பானவருக்காகச் சொல்லும் செபத்துக்குப்பின் "திருச்சபையைத் துன்புறுத்துவாருக்குமாறாக"ச் செய்யப்படும் செபத்தையும் சொல்லிவரவேண்டுமென்று பரிசுத்த பிதா ஆஞ்ஞாபித்திருக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க சமாச்சாரம்

### வீரத்துவ மேற்றிராணியார்

பிரான்சிலே ஆர்லியன்ஸ் நகர் மேற்றிராணியாராக மொஞ். பிகாத் தேலா வான்குவேர் சுவாமியார் நியமனஞ்செய்யப் பெற்றிருக்கின்றார். இரண்டாவது மகாயுத்தத்தின்போது இவர் நாஸிய சித்திரவதை முகாம்ஒன்றில் சிறைவைக்கப்பட்டிருந்தார். நாஸிகள் பரீஸ் நகரை ஆக்கிரமித்திருந்தகாலத்திலே அங்கு ஓர் விசாரணைப் பங்குக் குரவராயிருந்து இவர் காண்பித்த திடசித்தத்தைமிட்டு நாஸிய இரகசியப்பொலிசாராலே 1944-ம் ஆண்டு பிரான்சிலிருந்த முகாம்ஒன்றுக்கு அனுப்பப்பட்டார். பிந்த ஜேர்மன்முகாம் ஒன்றுக்கு இவரைக் கொண்டு செல்ல ஆயத்தப்படும்போது, நேசநாடுகளின்படைகள் தீவிரமாக முன்னேறியமையால் தப்பிக்கொண்டார்.

### விசேஷ தபால்முத்திரை

மோல்த்தாதீவு ஓர் விசேஷ தபால் முத்திரையைப் பாவனைக்குவிடுத்துக் கார்மேல்உத்தரிய காட்சி அருளப்பெற்ற ஏழாவது நூற்றாண்டுவிழாவைச் சமீபத்தில் கொண்டாடியது. இந்தத்தபால் முத்திரையிலே தேவதாயார் அர்ச். சைமன் ஸ்றொக் என்பவருக்குக் காட்சியளித்துக் கார்மேல்உத்தரியம் வழங்கும்பிரதிமை அமைந்திருக்கிறது. மோல்த்தா தீவுமக்களில் பெரும்பான்மையினர் கார்மேல் உத்தரியம் தரித்துவருகின்றனர். இந்தக்காட்சி இங்கிலாந்திலே கேம்பிறிட்ஜ் நகருக்குச் சமீபமாக அருளப்படலாயிற்று.

### மனந்திரும்பியவரின் குருபதவி

முன்னர் அமெரிக்கஐக்கிய தேசத்திலே ஓர் கைத்தொழிற் தலைவராய் இருந்தவரும், தமது கத்தோலிக்கமனைவியாரின்முன் மாதிரிகையால் மனந்திரும்பி 1933-ம் ஆண்டு திருச்சபையில் சேர்ந்துகொண்டவருமான திரு. கென்யன் றெனேல்டஸ்அவர்கள் தம்முடைய 59-ம்வயசிலே பிரித்தானிய கலம்பியாவைச் சேர்ந்த வங்குவரிலே ஓர்ஆசீர்வாதப்பர்சபைக் குரவராக அபிஷேகஞ்செய்யப் பெற்றிருக்கின்றார், 1945-ம்ஆண்டு தமதுமனைவியார் காலஞ்சென்றபின் அங்குள்ள ஆசீர்வாதப்பர்சபை ஆச்சிரமத்தில் இவர் சேர்ந்து 1945-ம்ஆண்டு அச்சபையில் ஓர் சந்நியாசராயினர். இவரைப் போலவே மனந்திரும்பிய இவருடையசகோதரரும் ஓர் குருவாயிருக்கின்றார்.

### புறெட்டஸ்தாந்தகன்னிகாசபை

அர்ச். ஆசீர்வாதப்பர், அவிலாநகர் அர்ச். தெரேசம்மாள், சாந்தாலின் அர்ச். அருளம்மாள் என்பவர்களின் அடிச்சுவட்டையும், ஞானப்போக்கையும் அடிப்படையாகக்கொண்டு புறெட்டஸ்தாந்த கன்னிகாசபை ஒன்று ஜேர்மனியிலே டாம்ஸ்ராட்நகரில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது "தேவதாயார்மட்டிலுள்ள பற்றுக்காரணமாக"—"மரியாயின் கன்னியாஸ்திரீமார்" எனும் பெயரைவகித்திருக்கும் இச்சபையானது முன்னே டக்றர்கிளாறுசிலிங்என அறியப்பட்டிருந்த ஸிஸ்றர் மரியா பசிலியாவைத் தலைவியாகக்கொண்டு 51பேரை அடக்கியுள்ளது. இவர்கள் கருமையான அங்கியையும், வெண்மையான முக்காட்டையும் தரிக்கின்றார்கள். "நித்திய ஆராதனை" எனும் நாமத்துடன் இவர்கள் கட்டியதாய்மடம் சென்ற புரட்டாசிமாதம் திறக்கப்படலாயிற்று.

### ஐரிஷ்சங்க அருந்தொண்டு

அயர்லாந்து தேசத்திலே குருத்துவத்துக்குப் படிக்க வெண்ணும் மாணவர்களுக்கு உதவிசெய்வதற்கென இருந்துவருகின்ற "அர்ச்.சூசையப்பரது இளங்குருமாரின் ஐரிஷ்சங்க"மானது தனது உதவியாலே இவ்வருடம் 35மாணவர்கள் குருப்பட்டம்பெறச்செய்து இதற்கு முன்னில்லாத பெருந்தொண்டாற்றியிருக்கிறது. இவர்களிலே 2பேர்பிரித்தானியிலும், 13பேர் அமெரிக்காவிலும், 15பேர் ஆபிரிக்காவிலும் குருப்பட்டம் பெற்றுக்கொண்டார்கள். இச்சங்கம் இதுவரையிலே 500பேர் குருமாராகவர உதவிசெய்திருக்கின்றது.

### அதிகம் வறியஇத்தாலியர்

இத்தாலியிலே மகாசெல்வமுள்ள பட்டணமெனப் பிரசித்திபெற்றுள்ளபுளோறென்ஸ் நகர் தனது புதியமேயராக இத்தாலியிலே அதிகம்வறிய மனிதரென்று பலமுறைகளிலும் சொல்லப்படுகின்ற ஜியோர்ஜியோ லாபிரு அவர்களைத் தெரிவுசெய்திருக்கிறது. ஓர் சந்நியாச ஆச்சிரமத்தில் வசித்துத் தமது சம்பளத்தை ஏழைகளுக்குப் பகிர்ந்துகொடுக்கின்ற இவர் கம்யூனிஸ்தர்களுக்குக்கோட்டை போன்ற அந்நகரிலே சிலுவை அடையாளத்துடன் தமதுசொற்பொழிவுகள் ஒவ்வொன்றையும் தொடக்கி வந்ததன்மேல் இத்தாலிய பாராளுமன்றத்தில் ஓர் ஸ்தானத்தை வெற்றிகொண்டார். சர்வகலாசாலையிலே இவர் றோமன்சட்டசாஸ்திர சரித்திரம் கற்பித்து வருகின்றார். இவர் ஒருபோதும் மேலங்கியோ அல்லது மழைப்பாதுகாப்பு அங்கியோ கொண்டிருப்பதில்லை. சமீபத்திலே றோமாபுரியில் இவர் மழையில் நனைந்து கொண்டு போவதை இத்தாலிய பாராளுமன்றத்து மற்றோர் பிரதிநிதி கண்டு தம்முடைய மழைப்பாதுகாப்பு அங்கியை இவருக்குக் கொடுத்துவிட்டார். ஒரு மணி நேரத்தின் பின் இவர் திரும்பவும் மழையில்நனைந்து கொண்டிருப்பதை அவர்கண்டு, நான் உமக்குக்கொடுத்த மழைப்பாதுகாப்புஅங்கி எங்கேயென்று வினவினர். "அப்படி ஒன்று இல்லாத ஓர் ஏழைவிருத்தாப்பியனுக்கு நான் அதைக்கொடுத்துவிட்டேன்" என்றார். "ஆனல், அது [illegible] வோ?" என்றார் அப்பிரதிநிதி. "அதைப்பற்றிக் கவலைப்படவேண்டாம்; மற்றொன்றை நீர் வாங்கமுடியும்" என்று இவர் [illegible]த்தார்.

# நல்ல ஒரு பிரசங்கம்

[ஓர் குருவானவர் எழுதுகின்றார்]

ஒருமுறை சிறுகிராமம்ஒன்றில் ஞானவொடுக்கப் பிரசங்கஞ்செய்ய நான் அழைக்கப்பட்டிருந்தேன். எனக்குத்துணையாக ஒருகுருவானவர் இருந்தார். அவர் வியாதிக்காரர். அதிகம் பலவீனமானவர். ஆனல், ஆத்தும இரட்சணிய ஆவல் மிகக்கொண்டவர். ஆகையால்,கடைசிநிமிஷம்வரையில் சர்வேசுரனுக்காக உழைக்கத் தீர்மானித்திருந்தார். நானே நல்லசுகதேகியாகவே, துணைச் சுவாமியாரின் வேலையையும் பார்க்கக்கூடிய பலமுள்ளவனாய் இருந்தேன். திடகாத்திரமுடைய எனதுபிரசங்கமே அதிகபலன் தருமென்றும் நினைத்திருந்தேன்.

ஒருநாள்காலை எனதுஉதவிச் சுவாமியாரைப்பார்க்க மிகப் பரிதாபமாய்இருந்தது. முகம் அதிகம் வெளுத்திருந்தது. பூசைக்குப்பின் சாப்பாட்டறைக்கு நடந்துபோவதே அவருக்கு வெருகஷ்டமாயிருந்தது. அன்றுகாலை எட்டுமணிப்பிரசங்கம் அவர்தான் செய்யவேண்டியிருந்தமையால் சற்றுவேளை படுத்து இளைப்பாற அறைக்குப் போனர். அவருக்குக் கஷ்டமாய்இருந்தால் நான் பிரசங்கஞ்செய்வதாகச் சொன்னேன். "இதிலும்மோசமான நேரங்களில்முதலாய் நான்பிரசங்கஞ் செய்திருக்கிறேன்" என்று சுவாமியார் சொல்லிவிட்டார்.

எட்டுமணிக்கு மெதுவாக நடந்துவந்துகோவிலைச்சேர்ந்து பிரசங்கத்தைத் தொடக்கினர். நல்ல ஒருபிரசங்கம். வாழ்க்கையில் மிகவும்பயன்படக்கூடிய பிரசங்கம். ஆனல், மிகுந்த பிரயாசையோடுதான் பிரசங்கிக்கிறார்என்று ஆருமேஎளிதில் அறிந்துகொள்ளக் கூடியதாயிருந்தது. அவர் பலமுறை தமது கைக்குட்டையை எடுத்துத் தமதுமுகத்தைத் துடைக்க வேண்டியிருந்தது. அன்று அதிகநேரம் பிரசங்கஞ்செய்ய அவரால்முடியவில்லை.

பிரசங்கம்முடிந்ததும் நேரே அறைக்குப் போனர். வழியில் நான் அவரைச் சந்தித்தேன். "சுவாமி, ஒருபிரயோசனமுமில்லாதநான் உமக்குத்துணையாக வந்திருக்கக்கூடாது; நான்வழக்கமாகப் பிரசங்கஞ் செய்வதே சொற்பநேரம்; அதிலும்இன்றைக்கு அந்தச்சொற்பநேரம் முதலாய்ப் பிரசங்கஞ்செய்ய என்னல் முடியாமற்போயிற்று; அவ்வளவு பலவீனமாய் இருந்தது; தொடங்கிய பிரசங்கத்தை முடிப்பதற்காவது பலம் தரும்படி சர்வேசுரனின் உதவியைக் கேட்பதற்காக ஒருமுறை நெடுநேரம் பிரசங்கத்தைநிறுத்தினேன்; சுவாமி, நான்உமக்கு அதிகஉதவிசெய்ய முடியாதது பற்றி வருந்துகிறேன்" என்று கஸ்தியோடுகூறினர்.

ஓ! நான் எவ்வளவு பலசாலி; இரண்டுமணிநேரந்தானும் மூச்சுவிடாமல் பிரசங்கிப்பேனேஎன்று மனதுள் நினைத்துக்கொண்டு "சர்வேசுரன் உங்கள் நல்லமனதை ஆசீர்வதிப்பார்; போய்கொஞ்சம இளைப்பாறும்; பத்துமணிக்குத்தான் பாவசங்கிர்த்தனத்துக்கு ஆட்கள் வருவார்கள்" என்று ஆறுதல் சொன்னேன்.

பெருமூச்சு விட்டுக்கொண்டே போனர் சின்னச்சுவாமியார். தம்மாலே கூடுமானதெல்லாம் செய்தும் பலன்ஒன்றும்இல்லையேஎன்று நினைத்து வருந்தினர். ஆனல், சர்வேசுரனுடைய வழிகள் வேறு. வல்லபமுடையவர்களை ஆசனத்தினின்றுதள்ளித் தாழ்ந்தவர்களை உயர்த்துகிறார். பலவீனர்களை ஆண்டவர் தெரிந்தெடுத்துப் பலசாலிகள் வெட்கம்அடையும்படி செய்கிறார். இதுசிக்கிரம் வெளியாயிற்று.

அன்றுமாலை ஒருமனிதர் எங்கள்அறைவீட்டுக்கு வந்து, காலைஎட்டுமணிப் பிரசங்கஞ் செய்த சுவாமியாரைத் தான் பார்க்கவிரும்புவதாகச் சொன்னர். இதைஅறிந்த துணைச் சுவாமியார் "அந்தமனிதர் விபரம்அறியாமல் கேட்கிறார்; இதில்ஏதோ தவறுஇருக்கிறது; இன்று காலைப்பிரசங்கம் அவ்வளவு நேர்த்தியாயில்லையே" என்றுசொல்லிக் கடைசியாக ஆளைக்கண்டுபேசச் சம்மதித்தார். அவரோ படித்தவர். சுவாமியார் வந்ததும், எழுந்து அவருக்கு மரியாதைசெய்தார்.

"சுவாமி, நீங்கள் வந்ததற்காகப் பெரியஉபகாரம்; தங்கள்பிரசங்கங்களை நான் ஆவலோடு கேட்டுவந்தேன்; இன்றுகாலை தாங்கள்செய்த பிரசங்கந்தான் மிகநேர்த்தியானது; நான்ஒரு பெரும்பாவி; 35 வருடங்களாகப் பாவசங்கிர்த்தனம் செய்தறியேன்; இக்காலமெல்லாம் எனக்குமன அமைதியே இல்லை; மனச்சாட்சி ஓயாது என்னை உபாதித்த பொழுதெல்லாம் தியானப்பிரசங்கம்நடைபெறும் கோயிலுக்குப்போய்ப் பிரசங்கம்கேட்டு வந்திருக்கிறேன்; ஏதாவதுஒருபிரசங்கம் எனது கடின இருதயத்தை அருட்டி இளகச்செய்யுமென்று நினைத்தேன்; கடைசியாக இன்று நான்கேட்டபிரசங்கமே என் இருதயத்தை அருட்டியது; தங்கள்வார்த்தைகள்,தங்கள்தோற்றம், மனந்திரும்பாத பாவிக்கு வருந்தண்டனைகள்பற்றித் தாங்கள்சொன்னயாவும் என்மனதில் ஆழமாய்ப்பதிந்தன; தங்களைஎப்படியாவதுகண்டு தங்களிடமே பாவசங்கிர்த்தனம் செய்யத்தீர்மானித்துவந்தேன்"

என்ன ஆச்சரியம்! அந்தச் சுவாமியாரின்சத்தம் பாதிக் கோவிலில்முதலாய்க் கேட்டிராது. இந்தமனிதர் மனந்திரும்

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநாள் அட்டவணை

ஐப்பசிமாதம் 1951

| | | | |
|---|---|---|---|
| வெ | 12 | அர்ச். வல்பிறித்தப்பர் | (ப) |
| சனி | 13 | அர்ச். எட்வாட் | (வெ) |
| ஞா | 14 | இஸ்பிரீத். ஆகமன. பின்வரும் 22-ம் ஞாயிறு — அர்ச். கல்லிஸ்தார் | (ப) |
| திங் | 15 | அர்ச். அவிலா தெரேசம்மாள் | (வெ) |
| செவ் | 16 | அர்ச். எட்வீசம்மாள் | (வெ) |
| புத | 17 | அர்ச். மார். மரி. அலக்கோக் அம்மாள் | (வெ) |
| வியா | 18 | அர்ச். லூக்காஸ் | (சி) |

சத்தியவேத

**பாதுகாவலன்**

1951-ம் ஆண்டு
ஐப்பசிமாதம் 11-ந் திகதி

## மிஷன் ஞாயிறு

‘மிஷன் ஞாயிறு’ என அறியப்படுகின்ற வேதவிசுவாசப் பரப்புதல்ஞாயிறு இம்மாசம் 21-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை வருகின்றது. விசுவாசம்என்பது சர்வேசுரன் நமக்குஅருளுகின்ற ஓர்பெருங்கொடையாகும். பக்திவைராக்கியமுள்ள கத்தோலிக்கர் ஒவ்வொருவரும் இந்த அருங்கொடையைப் பெருங்காதலுடன் பாதுகாப்பது மாத்திரமல்ல ஆனல், அதனைப் பெருத ஏனையவர்களும் அதைக்கண்டடையவும் தம்மாலான வழிவகைகளைச் செய்துவருவார்கள். ஞானசீவியந்தரும் வேதவிசுவாசமென்கிற இந்த மகா கொடையை இன்னுமே பெருதவர்களாய் உலகமடங்கலும் பல கோடிக்கணக்கான மக்கள் இருந்துவருகின்றார்கள் அஞ்ஞான இருளிலே அமிழ்ந்திக் கிடக்கின்ற இவர்களையெல்லாம் சத்தியத்தின்பிரகாசத்திற்கும், இரட்சணியத்தின் பாதைக்கும் வழிநடத்தவேண்டும். அவர்களும் கிறீஸ்துநாதரைஅறிந்து விசுவாசித்துத் தங்கள்அரசராகவும், கடவுளாகவும் அவரைஏற்றுக்கொள்ளச் செய்யவேண்டும். அதனல்அவருடைய திருவேதம் அவர்கள் மத்தியில் போதித்துப் பரப்பப்படவேண்டும். அங்ஙனம் வேதவிசுவாசத்தைப் பரப்புவதாகிய மகத்தானதொண்டிலே பதினயிரக்கணக்கான வேதபோதகர்கள்-கத்தோலிக்கமிஷனரிமார்கள் ஈடுபட்டுத் தங்களுக்குத் துணைசெய்யுமாறு விசுவாசிகளான கத்தோலிக்க மக்களின் ஒத்தாசையைவேண்டிநிற்கின்றார்கள். வேதபோதக தொண்டிற்கெனத் தங்களைமுற்றாகத் தியாகஞ்செய்துள்ள இந்த மிஷனரிமார்களுக்கு ஒத்தாசை புரிந்துவரக் கிறீஸ்துநாதர் பேரால், பிறர்சிநேகத்தின் பேரால் நாமும் கொஞ்சம் தியாகஞ்செய்யப் பின்னிற்கலாமா?

மிஷன்ஞாயிறுஎன்பது விசுவாசிகள் மிஷன்நாடுகளுக்குச் செய்யக்கூடிய உதவிஒத்தாசைகளை ஒருங்கேதிரட்டி ஒருமுகப்படுத்துவதாலே அவர்களுக்கெல்லாம அஃது வருடத்தின் மகாவிசேஷப்பட்டதினங்களில் ஒன்றாகும். ஏனெனில், உலக முழுவதிலுமுள்ள நமதுகத்தோலிக்க மிஷனரிமார்கள், மிஷன் நாடுகளை ஆதரிப்பதற்காகச் செபத்திலும், தியாகத்திலும் குருமார், சந்நியாசர், கன்னியாஸ்திரிமார், விசுவாசிகளெல்லாம் ஒன்றாய், ஒரேகுடும்பம்போல் ஐக்கியப்பட்டு வேலைசெய்ய வேண்டுமென்று பரிசுத்தபாப்பரசராலே கிறீஸ்துவஉலகம் முழுவதிலும் பரிந்துகேட்கப்படும் ஓர்பெரியதினம் அதுவாகும். இந்தநாளிலே கிறீஸ்துநாதரிடமாக ஆத்துமாக்களை வெற்றிகொள்வதாகிய பெரும் ஞானப்போரில் ஈடுபட்டிருக்கின்ற திருச்சபையின்வீரத்துவ புதல்வர்களுக்கும், புதல்விகளுக்குமாகத் திவ்வியபூசைகண்டும், திவ்வியநன்மை பெற்றும், செபங்கள்செய்தும் ஒப்புக்கொடுக்குமாறு விசுவாசிகள் கேட்கப்படுகின்றார்கள். ஏன்? ஏனெனில், கிறீஸ்துநாதருக்காகச் செய்யப்பெற்றுவரும் இப்பெரும்புனிதபணியைக் கொண்டுநடத்துதற்குக் குன்றுகதிடமும், அஞ்சாததீரமும் தங்களுக்குக் கிடைக்கத்தக்கதாக விசுவாசிகளாகிய நமதுஞானஉதவியிலேயே அவர்கள் தங்கியிருக்கின்றார்கள்.

மிஷன்ஞாயிறை அனுசரிப்பதாலே விசுவாசப்பரப்புதற்தொண்டுகள் பொருளாதார விஷயமாயும் உதவிபெற்று நன்மை அடையும்படியாக அன்றுதினம் தருமங்களும், விசேஷகொடைகளும் கேட்கப்படுகின்றன. பல்வேறுமிஷன் நாடுகளினதும் தேவைகளைத் தொடர்ந்து பூர்த்திசெய்துவருகின்ற விசுவாசப்பரப்புதற்சபை, திருப்பாலத்துவ சபை ஆகிய பாப்பரசரது மிஷன்நாடுகளின் உதவிச்சபைகளுக்குத் தங்களாலியன்ற பணஉதவி செய்யும்படியாகச் சகலரும் ஆர்வத்துடன் கேட்கப்படுகின்றார்கள. அதனல் அன்றுதினம் கிறீஸ்துஇராசாவின் வீரத்துவம் வாய்ந்த போர்வீரர்கள் என்றமட்டிலே, நமது செபங்களாலும், பரித்தியாகங்களாலும், பணஉதவிகளாலும் ஆதரவளிப்பதுடன் நின்றுவிடாது, வேதத்தைப்பரப்பும் பெரியக்கத்திலே மற்றவர்களும் ஊக்கமாய்க்கலந்து பங்குபற்றும்படியாக அவ்விருசபைகளிலும் அவர்களைச்சேர்க்கவும் உதாரகுணத்தோடும், நன்மனத்தோடும் முன்வருவோமாக! பிள்ளைகள் இனிப்புப்பண்டங்கள், பொழுதுபோக்குகளுக்கென்று தங்களுக்குக்கொடுபடும் பணத்திலே ஒருபகுதியை வேதப்பரப்புதலுக்கென்று சிறுதியாகங்கள்செய்யும்போது— அதற்கெனத் தங்கள்பெற்றாரிடம் ஐந்து பத்துச்சதமென வாங்கிப்போய்த் தங்கள் சின்னக்கைகளாலே கொடுக்கும்போது சின்னயேசு எவ்வளவு சந்தோஷப்படுவார்! வேதப்பரப்புதலுக்கென நாம்ஒவ்வொருவரும் செய்யக்கூடியசிறியஉதவியானது, பலதுள்ளி பெருவெள்ளமாவதுபோல் பெருகி எத்துணைபெரும் நன்மையுண்டாகுமென்பதை [illegible] னல், அதற்காக என்னதான் செய்யவேண்டுமென்றாலும் ஒருபோதுமே பின்வாங்கமாட்டோம்.

## இஸ்பிரீ. ஆக. பின்வரும்
## 22-ம் ஞாயிறு

சுவிசேஷ வாசிப்பு
(மத். 22 : 15—21)

அக்காலத்தில் பரிசேயர் அப்புறஞ்சென்று, பேச்சிலே யேசுநாதரைக் குற்றம்காண ஆலோசனைசெய்தார்கள். பின்னும், தங்கள்சீஷர்களை ஏரோதியரோடுகூட அவரிடத்தில்அனுப்பிக் கேட்டதாவது: குருவே, நீர் உண்மையுள்ளவருமாய்ச் சர்வேசுரனுடையநெறியைச் சத்தியத்தின்படியே போதிக்கிறவருமாய், எவன்மட்டிலும்தாட்சணையில்லாதவருமாய் இருக்கிறீரென்று அறிந்திருக்கிறோம; ஏனென்றால், நீர்மனிதருடைய அந்தஸ்தைப் பார்க்கிறதில்லை. ஆதலால் உமக்குத்தோன்றுகிறதை எங்களுக்குச்சொல்லும். இராயனுகிய சேசாருக்கு வரி செலுத்தலாமோ, அல்லவோ? என்றார்கள். யேசுநாதரோ அவர்களுடையகெட்டஎண்ணத்தையறிந்து: கள்ளஞானிகளே! ஏன் என்னைச் சோதிக்கிறீர்கள்? வரிநாணயத்தை எனக்குக்காட்டுங்கள் என, அவர்கள் ஓர் தெனியரை அவருக்குக் காண்பித்தார்கள். அப்பொழுது, யேசுநாதர் அவர்களைநோக்கி: இவ்வுருவமும், மேலெழுத்தும் யாருடையன? என்றார். சேசாருடையதென்று சொன்னார்கள். அப்போதுஅவர் அவர்களை நோக்கி: அப்படியானல் சேசாருக்குடையவைகளைச் சேசாருக்கும், சர்வேசுரனுடையவைகளைச் சர்வேசுரனுக்கும்செலுத்துங்கள்என்றார்.

கிறீஸ்துவே, உமக்குப் புகழ் உண்டாவதாக.

## சுதேச வர்த்தமானம்

### அடைக்கலமாதா கோவில்

யாழ்ப்பாணத்துக் கடைசிஅரசனின் குமாரத்தி ஒருவர் சிலநூற்றாண்டுகளுக்குமுன் கோவைநகரிலுள்ள கன்னிகாமடம்ஒன்றின் தலைவியாயினர். இன்று யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த மற்றோர்குமாரத்தி இந்தியாவிலே செம்பகனூரிலுள்ள அர்ச். சூசையப்பரின் கார்மேல் சபைக் கன்னிகாமடத்து உபதலைவியாக இருந்துவருகின்றார். திரு. ஜேம்ஸ் திருச்செல்வம்அவர்களின் புதல்வியான குழந்தையேசுவின் சங். சிஸ்றர் தெரேஸ் அவர்களே இந்தக் கன்னிகாஸ்திரீயாவர். இவர் யாழ்ப்பாணம், பரிசுத்தஅடைக்கலமாதாவின் ஆலயத்திலே 1906-ம்ஆண்டு புரட்டாசிமாதம் 29-ந்திகதி ஞானஸ்நானம் பெற்றார். நிகழும் ஐப்பசிமாதம் 15-ந் திகதி திங்களன்று தாம் கன்னிகா அந்தஸ்தில் உட்பட்ட 25-ம்வருட வெள்ளி யூபிலிவிழாவை இவர் கொண்டாடவிருக்கின்றார். அன்றுதினம் யாழ்ப்பாணம் பரிசுத்தஅடைக்கலமாதாவின் ஆலயத்திலே காலை 6 மணிக்கு நிறைவேறவிருக்கும் தேவதோத்திர பாடற்பூசைக்குச் சமுகமளிக்குமாறு யூபிலிநாயக கன்னிகாஸ்திரீயின் விசாரணைப் பங்குக் கிறீஸ்தவர்களும் சுற்றத்தவரும் அழைக்கப்படுகின்றார்கள்.

### யாழ்ப்பாணச்சுப்பிறீங்கோடு

இரண்டாவதாய் ஓர் ஸ்டேஷன் மாஸ்றராயிருந்து இளைப்பாறியவரான வல்லிபுரம் செல்வநாயகம் என்பவர் தனது சகோதரியும், இராஜையா என்பவரின் மனைவியுமான பார்வதியம்மாளைச் சென்ற சித்திரைமாதம் 8-ந் திகதியன்று ஓர் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றாரெனக் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்டிருந்தவழக்கு விசாரணைக்குவந்து, தான் கைபிழைபாட்டுக் குற்றவாளியென்று எதிரிஒப்புக்கொண்டதின்பேரில் மூன்றுவருடக் கடுமூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டனர்.

மூன்றாவதாய் — காரைநகர் கிழக்கைச்சேர்ந்த சின்னப்பு கதிரவேலு என்பவன் அவ்விடத்தைச்சேர்ந்த ஆழ்வான் ஐயனைக் ஓர் மண்டாகொண்டு குற்றிக் கொலைசெய்ய எத்தனித்தானென்று குற்றஞ்சாட்டித் தொடரப்பட்டிருந்த வழக்குவிசாரணைக்குள்ளாய் முடிவில் எதிரி குற்றவாளியாகி ஒன்பதுமாதக் கடுமூழியசிறைத்தண்டனை விதிக்கப்பட்டனன்.

### புதிய பிரதம நீதியாசர்

இலங்கைச் சுப்பிறீங்கோட்டுப் பிரதம நீதியரசராய் இருந்துவந்த சேர் எட்வாட் ஜயதிலகஅவர்கள் தம்பதவியிலிருந்து இளைப்பாறியமையாலே அவரிடமாகப் புதிய பிரதம நீதியரசராகச் சேர் அலன் றோஸ்அவர்கள் நியமனஞ்செய்யப்பெற்றுள்ளனர். இவர் தம்புதிய பதவியை இன்று கையேற்கவிருக்கின்றார். இலங்கைச் சுப்பிறீங்கோட்டுப் பிரதம நீதியரசர்களாக இதுவரை நியமனஞ்செய்யப்பெற்றவர்களில் இவரே வயதில் அதிகம் குறைந்தவர். இவர் 1945-ம்ஆண்டு ஓர் உபநீதியரசராக இலங்கைக்குவந்து சட்டக்காரியதரிசியாகவும், அற்றோர்ணி ஜெனறலாகவும் இதுவரை பதவிகள் வகித்திருந்தார். இவருக்குத் தற்போது வயசு 52.

### பிரதம நீதியாசர்

இலங்கைப் பிரதம நீதியரசராக விளங்கியிருந்தவரான சேர் எட்வாட் ஜயதிலக அவர்கள் சென்ற 9-ந்திகதி திங்கட்கிழமை தம்பதவியிலிருந்து இளைப்பாறியிருக்கின்றார். அதற்கு முதல்நாள் பிரதம நீதிஸ்தலத்திலே நீதியரசர்களும், அற்றோர்ணி ஜெனறல், [illegible] அப்புக்காத்துமார், பிரக்கிராசிமார் ஆதியோரும் ஒருங்குகூடி அவருக்குப் பிரியாவிடை கூறினார்கள். அத்தருணம் அற்றோர்ணி ஜெனறல் அவர்கள் பிரதமநீதியரசர் நீதிப்பரிபாலனசேவையிலே 40 வருடகாலம் ஈடுபட்டிருந்து ஆற்றிவந்துள்ள மகத்தான சேவைகளைப்பாராட்டி நின்றார்.

### பிரதமரின் பிரயாணம்

பிரதமர் டி. எஸ். சேனநாயகஅவர்கள் தமது புதல்வரான கமத்தொழில் மந்திரியார் திரு. டட்லி சேனநாயக சமேதராய்நல்லெண்ணத்தூதின்பேரில் இந்தியாவுக்கும், பர்மாவுக்கும், சிங்கப்பூருக்கும, ஆஸ்திரேலியாவுக்கும், நியூசிலாந்துக்கும் விஜயஞ்செய்வதற்காக ‘ஏயர் சிலோன்’ டகோட்டா விமானத்திலே சென்ற திங்கட்கிழமை காலை இரத்மலானை விமானநிலையத்திலிருந்து பிரயாணமாயினர். அத்தருணம் மந்திரிமாரும, இராசியப் பிரதிநிதிகளும், வர்த்தகதலைவர்களும், அரசாங்க உயர்தர அதிகாரிகளும் சமுகமாயிருந்து அவர்களைப் பயணமனுப்பி வைத்தார்கள்.

### புதியஅற்றேர்ணி ஜெனறல்

இலங்கை அற்றோர்ணி ஜெனறலாய் இருந்துவந்த சேர் அலன் றோஸ்அவர்கள் பிரதம நீதியரசராக நியமனஞ் செய்யப்பெற்றமையாலே இவரிடமாகப் புதிய அற்றோர்ணி ஜெனறலாகச் சுப்பிறீங்கோட்டு நீதியரசர்களில் ஒருவரான திரு. எச். பசனுய்க அவர்கள் நியமனஞ் செய்யப்பட்டிருக்கின்றார். இவருக்குத் தற்போது வயசு 49. இவர்முந்தக் காலி, சென் அலோஷியஸ் கல்லூரியிலும், பிந்தக்கொழும்பு, சென் யோசெவ் கல்லூரியிலும் கல்விபயின்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விசுவாசப் பரப்புதல்சபை ஞாயிறு

# அழைப்பு

### 21—10—51

**"துன்பழுற்றும் பொறுமையாயிருக்கிறோம்" (கொரி. 4. 2.)**
**உங்கள் தருமத்திற்கு மனமார்ந்த நன்றி.**

அகிலஉலக விசுவாசப் பரப்புதல்சபை மகாநாட்டின்போது சென்ற வைகாசிமாதம் 30-ந்திகதியிலிருந்து ஆனிமாதம் 1-ந்திகதிமட்டும் உரோமையில் சமுகமாயிருந்த தேசியத்தலைவர்கள் சமர்ப்பித்த விஷயங்களிலிருந்து உலகெங்கும் விசுவாசப் பரம்புதலுக்காகக் கிறீஸ்துவசகோதரர்கள் வழங்கிய தர்மத்தின் மகத்துவத்தைக் கண்டுணர்ந்து ஆச்சரியமுற்றோம்.

நம்சபைத்தலைவர் கருதினல் பூமாசோனி பியந்திஆண்டவர் நீங்கள்புரிந்த தர்மத்திற்காக உங்கள் அனைவருக்கும் தமது மனமார்ந்தநன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறார்.

### தற்கால வேதகலாபனையிலே விசுவாசப் பரப்புதல்சபையின் தர்மம் முன்னைவிட அவசியத்திலும் அவசியம்.

கீழ்த்திசையின் பலபகுதிகளில் ஆக்கிரமிப்புமிகுந்த வேதகலாபனை தொடங்கியுள்ளது. எங்கும் நாஸ்திகம், ஆக்கிரமம், அட்டூழியம்என்பன திருச்சபையின் அநேகஆலுவல்களை அழித்துள்ளன. மேற்றிராணிமாரையும், குருமாரையும் சிறைச்சாலைக்குஅனுப்பிச் சங்கிலியிட்டு உயிர்வாங்கின. கோறியாவில் ஏறக்குறைய ஐம்பது பிறதேச குருமாரும், கோறிய குருப்பிரசாதிகளும், பாப்பரசரின் ஸ்தானபதியும்கூட இருந்தஇடம் தெரியாமல் மறைந்துபோயினர். நாஸ்திகர் எண்ணிக்கையில்லாத குருமாரை வதைத்துக் கொன்றுபோட்டனர். மேலும் மறுபகுதிகளில் ஆறுமேற்றிராணிமாரும், இரு திருச்சபைஅதிபர்களும், ஏறக்குறைய எழுபது குருமாரும், கன்னியர்களும் சிறைச்சாலையில் இருக்கின்றனர். யேசுவின்நாமத்திற்காக வேதகலாபனையை அனுபவிக்கத் தகுதியுள்ளவர்களாக எண்ணப்பட்ட (அப்போ. நடபடி. 5. 4.) விசுவாசிகள், சுதேசகுருமார், அந்நியதேசகுருமார் ஆகியவர்களின் திடமனதையும், பக்திவிசுவாசத்தையும் மிகுந்தசிரவணத்துடன் மதித்துப் பெருமை பாராட்டுகிறோம்.

### ஒரு மேற்றிராணியார் எழுதுவதாவது:

குருமாரும், விசுவாசிகளும் மிகுந்ததிடாரிக்கத்துடன் விசுவாசத்தைப் பாதுகாத்து உரோமாபுரித் திருச்சபைக்குத் தாங்கள் என்றும் பிரமாணிக்கமாய் இருப்பதாகஎண்பிக்க ஊக்கமுற்றுள்ளனர். மற்றொரு மேற்றிராணியார், நாஸ்திகபிரசாரம் செய்கிறவரைப்பார்த்து வீரத்துவத்துடன் சொல்லுவார்: "நீவிர் நம்மைக் கொல்லலாம், ஆனால், ஒருக்காலும் எம்மை உரோமாபுரியிலிருந்து பிரிக்கமுடியாது."

### விசுவாசப் பரப்புதல் வீரரின் சகிக்கமுடியாத தவிப்பு

மற்றும் ஒருமேற்றிராணியார் எழுதுவார்: "எமது ஸ்தாபனத்தின் பணநெருக்கடியும், சகிக்கமுடியாத வறுமையும் எம்மை ஆழ்ந்தகஷ்டஸ்திதியில் அமிழ்த்தியுள்ளன. சீவனும்சத்திற்குத் தேவையான உணவைமுதலாய் எமது குருமாருக்கு நாம் எப்படி வழங்கப்போகிறோம் என்று திகைத்துக்கொண்டிருக்கிறோம்." இன்னும் கேளுங்கள்: ஒரு மேற்றிராணியார் வறுமையின் தவிப்பினால் தாம் அணிந்திருந்த மோதிரத்தை முதலாய்விற்று உணவுப் பொருள்களை வாங்கினார். என்னேவறுமை!

### "ஆதிகாலக் கிறீஸ்துவர்களைப்போல் வேதகலாபனையில்தவிக்கும் உங்கள் சகோதரருக்கு உதவிபுரிய முன்வரமாட்டீர்களா!

ஆதிகாலத்து வேதகலாபனையின்போது கிறீஸ்துவ சகோதரர்கள் தங்கள் விசுவாசத்தின் பொருட்டுச் சுரங்கத்திலும், மற்றுங்கடுமையான உழைப்பிலும் தண்டிக்கப்பட்டவர்களுக்கு அபரிமிதமாக உதவிபுரிந்தார்கள். தருமம் தாராளமாக வழங்கினார்கள். இன்று அதேவிதமான வேதகலாபனைகளை நாம் காண்கின்றோம். உறுதியுள்ள விசுவாசத்திற்காக வேதகலாபனையின் முன்னணியில் யேசுஇராசாவின் சுத்தவீரர்களாகவிளங்கும் நமது சகோதரர்களுக்கு அதேவிதமான தர்மத்தை நாமும் அருளவேண்டும்.

### வேதகலாபனையில்லாத தேசங்களிலும் ஏராளமான உதவிதேவை

அநேக தேசங்களிலும் இன்னும் வேதகலாபனையின் அதிர்ச்சி ஏற்படாத அநேகநாடுகளிலும் மிகுந்தஊக்கத்துடன் அநேககுருமார் உழைக்கின்றனர். பள்ளிக்கூடங்களைக்கட்டவும், நடத்தவும், அநேக தர்மஸ்தாபனங்களை நடத்தவும் அதாவது ஆஸ்பத்திரிகள், அநாதமடங்களை நடத்தவும் உங்கள்தருமம் விசுவாசப் பரப்புதல்சபைக்கு மிகவும்அவசியம். இவ்வித தர்மஸ்தாபனங்களினால் ஆவேசம்கொண்ட ஓநாய்களின் வாயினின்று கணக்கற்ற ஆத்துமாக்களை நமதுதாயாகிய திருச்சபை காப்பாற்றிவருகின்றது.

### இறுதிவிண்ணப்பம

உலகெங்குமிருக்கும் சகலவேதபோதக குருக்களினதும் பெயரால் சகல விசுவாசிகளுக்கும் இந்த அவசியமான விண்ணப்பத்தைத் தீவிரமாய்ச் சமர்ப்பித்துக் கொள்ளுகிறோம். விசுவாசப் பரம்புதலுக்கு மிகவும்நெருக்கடியான இந்தநேரத்தில் நீங்கள் எப்பொழுதும் வழங்கும்தருமத்தை மிகுந்ததாராளமனதுடன் வழங்குமாறு இத்தருணம் விண்ணப்பித்துக் கொள்ளுகிறோம். இவ்வுலகம் புதுப்பிக்கப்பட்டு ஒன்றில் திவ்வியயேசுவோடு இரட்சிக்கப்படும் அல்லது அந்திக்கிறீஸ்துவோடு அழிவுறும். யேசுவோடு இருக்கவும், உலகை இரட்சிக்கவும் நீங்கள் முன்வரமாட்டீர்களா? உங்கள் பதிலை எதிர்பார்க்கும்,

மகாவந். கோஸ்தாந்தினி மேற்றிராணியார்,
செயலாளர், உரோமை.

### விசுவாசப்பரப்புதல் ஞாயிறுக்குமுன் நவநாள்

**1951 ஐப்பசி 13-ந்திகதியிலிருந்து 21-ந்திகதிவரை**

1. நவநாட்செபம் தினந்தோறும் சொல்லுங்கள் (11-ம்பத்திநாதர்செய்தது.)
2. கூடுமான இடங்களில் பலவகைப்பட்ட சபையார் எல்லாரும் ஒவ்வொரு நாளும் பூசைகண்டு, நற்கருணை வாங்கலாம்.
3. இவ்வருஷத்து மிஷன்ஞாயிறு அழைத்தலுக்கிசைய மிஷன்நாடுகளில் மனந்திருப்புதல் சேவைக்காக வேண்டிக்கொள்ளுங்கள்.

**18,000 பலிபூசைகளில் பங்குபெற வேண்டுமா?**
இத்தனை பூசைப்பலன்கள் உங்களுக்கு வேண்டுமாகில்,

**விசுவாசப்பரப்புதல் சபையில்சேர்ந்து**

பரோபகார சிந்தையோடும் தாராளமனதோடும் சர்வேசுரன் பேரால் உங்களால் இயன்ற தர்மம்செய்வீர்களாக.

1. செபம்: தினம் ஒரு. பர. ஒரு. பிரி. "அர்ச். சவேரியாரே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்; அர்ச். குழந்தை தெரேசம்மாளே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்" என்று செபிக்கவும்.
2. தியாகம்: வருடந்தோறும் 1 ரூபா 50 சதம் கொடுக்கவும்.

ஜி. வி. ஐ. சாமா சுவாமியார், S. J.
அகில கீழ்த்திசைச் செயலாளர்.

---

பின் கல்லூரியிற்சேர்ந்து, ஓர் அப்புக்காத்துவாக அரங்கேறினர். சமயத்தில் இவர் ஓர் பௌத்தராவர்.

### தெலிபோன் இணைப்பு

பரந்தனிலுள்ள புதிய குடியேற்ற திட்டப்பகுதியிலே சமீபத்தில் நடந்தேறிய பகிரங்ககூட்டமொன்றில் தந்தி—தபால் மந்திரியாரான திரு. சி. சிற்றம்பலம்அவர்கள் பேசியபோது கந்தாவளை, குஞ்சுப்பரந்தன், பூநகரிப் பகுதிகளை இணைக்கும்படியாகப் பரந்தனிலே ஓர் மத்திய தெலிபோன் போக்குவரத்து நிலையத்தை அமைத்துத்தருவதாக வாக்களித்திருக்கின்றார்.

---

அச்சுவேலிக் கட்டளைக்குரவரான வண. ஜோண் சிங்கராயர் சுவாமியவர்கள் தமது அருமைத் தந்தையாரான திரு. விருஸ் பிள்ளை ஜோண்பிள்ளை அவர்களின் மரணத்தை இத்தாலே தெரிவித்து, அவருடைய ஆன்ம இளைப்பாற்றிக்காக மன்றாடிக் கொள்ளும்படியாகத் தமது சகோதரகுருப்பிரசாதிகளையும், மற்றும் சந்நியாசர், கன்னியாஸ்திரிமார், அன்பர்களையும் பரிவாக வேண்டுகின்றார். R. I. P.

---

ST. JOSEPH'S CATHOLIC PRESS, JAFFNA.

**RATES OF ADVERTISEMENTS**
AND PUBLICATIONS IN
**"The Sathia Vetha Pathukavalan"**
(TAMIL CATHOLIC GUARDIAN)
(WEEKLY ON EVERY THURSDAY)

**A. Casual:**
Rs. 1-50 per inch Single Column

**B. Contracts:**
Rs. 15-00 per Quarter Page per insertion
Rs. 25-00 „ Half „ „ „
Rs. 50-00 „ Full „ „ „

**C. Discounts:**
10% for three insertions or more
20% Contract lasting 3 months or more
30% Contract lasting one year or more

**Order Nisi:**
Rs. 5-00 for two insertions.

---

# பாடசாலைக்கோணம்

பாதுகாவலனில் இதுவரையும் தோன்றிய வேதவினுக்களுக்குத் திருப்தியான விடைகளனுப்பிய பாடசாலைகள் பின்வருமாறு:—

| இடம் | பாடசாலை | மிகவும் திருப்தி கொடுத்த முறைகள் | முதலிடம் பெற்ற முறைகள் |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | தமிழ்க்கன்னியர் மடம் | 0 | 0 |
| | ஸ்ரான்லி பாடசாலை | 1 | 0 |
| | சஞ்சூசையப்பர் சாதனைகூடம் | 3 | 1 |
| மன்னார் | அர்ச். சவேரியார் கல்லூரி | 1 | 1 |
| பள்ளிமுனை | அர்ச். லூசியா பாடசாலை | 1 | 0 |
| பாப்பாமோட்டை | றோ. க. த. பாடசாலை | 2 | 0 |
| நாரந்தனை | றோ. க. பெண்பாடசாலை | 1 | 0 |
| கரவெட்டி | திருஇருதயகல்லூரி | 4 | 0 |
| அச்சுவேலி | அர்ச். திரேசம்மாள்மடம் | 1 | 0 |
| மாவிலங்கேணி | றோ. க. கலவன்பாடசாலை | 3 | 1 |
| கண்டி | நல்லஆயர்மடம் | 1 | 0 |

**A.** பரிசுபெற உரித்துடையோர்:
1. பி. அன்னம்மா, றோ. க. பாடசாலை மாவிலங்கேணி
2. வி. அலெக்சான்டர், சாதனைகூடம் கொழும்புத்துறை
3. ப. பெனடிற், அர்ச். சவேரியார்கல்லூரி மன்னார்

மேற்படி நாமங்கள், வருஷாந்த ஞானோபதேசப் பரிசளிப்புச்சங்கத்திற்கு அனுப்பப்பட்டன.

**B.** கடுமையெனக் கிடைக்கப்பெற்ற வினுக்களுக்கு, மறுவாரங்களில் விடைகள் தோன்றும். இன்னும் வினுக்கள் அனுப்பவிருப்போர் Rev. Fr. B. E. Alfred, O.M.I., Bishop's House, Jaffna என்னும் விலாசத்திற்கு அவற்றை அனுப்பவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுவர்த்தமானம்

## பிரித்தானியின் சேனாபலம்

பிரித்தானிசமீபத்திலே ஆயுதபாணிகளான ஒன்பதுலட்சம்போர்வீரரைக் கொண்டிருக்குமென்று அதன்நிதிமந்திரியாரான திரு. ஹியு கெயின்ஸ்கெல் அறிவிக்கின்றார். பிரித்தானியிலுள்ள உழைப்பாளிகளான சனங்களிலே பத்துப்பேரில் ஒருவர்வீதம் இனிமேல் பட்டாளங்களில் சேர்ந்திருப்பர், அல்லது அவர்களுக்குவேண்டிய ஆயுதங்களை உற்பத்திசெய்வார்கள். பிரித்தானி தற்சமயம் பூரணமாகப்பயிற்சிபெற்ற நான்கு இராணுவபிரிவுகளை ஐரோப்பாவில் கொண்டிருக்கிறது. மற்றுமோர்பிரிவு சமீபத்திலே தயாராய்இருக்கும். பிரித்தானியின்பாதுகாப்புத்திட்டவிஷயமாய் அடுத்த மூன்றுவருடங்களிலும் அது சுமார் 470 கோடிபவுண் செலவிடவிருக்கின்றது.

## வேதாகம புதியபதிப்பு

நியூயோர்க்நகரிலே ஒரேமுறையில் பத்துலட்சம் வேதாகமபுத்தகங்கள் அச்சிடுவதற்கான ஒழுங்கு நடைபெறுகின்றது. உலகில் எந்தப்புத்தகமாவது ஒரேமுறையில் அத்தனை பெருந்தொகையாக அச்சிடப்படுவது இதுவே முதன்முறையாகும். இதற்கு ஆயிரம்தொன் கடதாசியும், 16,670 றாத்தல் மையும், $71\frac{1}{2}$ மைல்நீளமான சீலையும், 140 தொன் மட்டையும், 1,87,50,000 யார்நூலும் தேவைப்படும். பத்துலட்சம் புத்தகங்களையும் ஒன்றின்மேல்ஒன்றாக அடுக்கிக்கொண்டுபோனால் 24 மைல்உயரத்துக்குச் செல்லும். 40 புரொட்டஸ்தாந்த சபைப் பகுதிகள்சேர்ந்தே இவைகளை அச்சிடவிருக்கின்றன. இவற்றிற்கு ஏற்படவிருக்கும்செலவு 50 லட்சம் டலராகும்.

## பிரமாண்டமான தடாகம்

சைபீரியாவிலுள்ள இருஆறுகளை மறித்துக்கட்டி அமைக்கும் பாரிய தடாகம்ஒன்றாலே நிலத்தைச் சீர்ப்படுத்தி மத்தியஆசிய வனாந்தரத்தில் 2 கோடியே 50 லட்சம் ஹெக்றர்(ஒரு ஹெக்றர்—ஏறக்குறைய இரண்டரை ஏக்கர்) விஸ்தீரணமான நிலத்தை நீர்ப்பாய்ச்சுதற்கான திட்டம் ஒன்றைச் சோவியற்அரசு செய்திருக்கின்றது. 2 லட்சத்து 50 ஆயிரம் சதுர கிலோமீற்றர் விஸ்தாரமுடையதாய் உலகின்மகாப் பிரமாண்டமான தடாகத்தை ஆக்குவதற்கென்று ஒப்நதியிலே 78 மீற்றர்உயரமான அணைக்கட்டுஒன்று அமைக்கப்படவிருக்கிறது. இந்தத்திட்டத்தைச்செய்தவர் 55வயசுடையவரான பிற்றேருபன் டவிடோய்எனும் இஞ்சினீரே. இவர் மற்றும்அநேக இஞ்சினீர்மார்களின் துணையோடு 20 வருடகாலம் இதிலே ஈடுபட்டு வந்திருக்கிறாராம். தற்போது வடசமுத்திரத்திலே வீணாகப்போய்க் கழிகின்ற ஒப், ஜென்ஸிஎனும் இரு ஆறுகளின்தண்ணீரும் மத்தியஆசியாவிலே கசாக்ரான்பகுதியிலுள்ள பாரிய வனாந்தரங்களைத் திருத்துவதற்கும், நீர்ப்பாய்ச்சுவதற்கும் உபயோகிக்கப்படும்.

## புதிய பால்குற்றும் மருந்து

இன்புளுவென்சாஎனப்படும் கொள்ளைச்சுரம்வராமல்தடைசெய்யக்கூடிய பால்குற்றும் மருந்துஒன்று லண்டன் நகர ஆஸ்பத்திரிஒன்றிலே பெனிசிலினைக் கண்டுபிடித்தவரான சேர் அலெக்சான்டர் பிளெமிங்அவர்கள் தலைமையிலே செய்யப்பட்டுவருகிறது. சினைப்பட்டமுட்டைகளிலிருந்து இந்த மருந்தைத் தயாரிக்க ஏறக்குறைய மூன்றுவாரம் செல்லுகின்றது. ஆஸ்பத்திரித் தாதிமார்களிலும், வைத்திய மாணவர்களிலும் இது பரிசோதிக்கப்பெற்று உற்சாகமளிக்கும் பலனைத்தந்திருக்கிறது. படிங்ரனிலுள்ள சென் மேரீஸ் ஆஸ்பத்திரியைச்சேர்ந்த றைற்-பிறெமிங் ஸ்தாபன ஆராய்ச்சியாளர்கள் இதனைத்தயாரிப்பதற்கான இயல்பை ஆராய்ந்தார்கள். இதனைத் தயாரிக்க அதிகசெலவு பிடிக்கின்றது. முதற்செய்தமருந்து பரிசோதனையிலே ஏறக்குறைய முடிவாகிவிட்டது. இன்புளுவென்சாகண்டவர்களிலேஇருந்தப்பால் குற்றப்படுமிடத்து, எவ்வித தீங்கும் விளைக்கமாட்டாது. வளர்ந்தவர்களுக்குப்போலவே பிள்ளைகளுக்கும் இதனைஉபயோகிக்கலாம்.

## நவீன வைத்தியகருவி

இரத்தத்திலே சீனிஅதிகரித்து ஏற்படும் நீரிழிவுரோகத்தை 30 செக்கனிலே நிதானித்து அறியக்கூடிய நவமானகருவிஒன்று கண்டுபிடித்துச் செய்யபபட்டிருக்கிறது. வழமையிலே தேவைப்படும்நேரத்தில் இது பத்தில் ஒருபங்காகும். "ஹியூசன் கிறிநிற்றன்"என்று அறியப்படுகின்ற இந்தக் கருவி பெருந்தொகையான ஆட்களிடமிருந்து மாதிரிக்காகக் கொணடுவரப்படும் இரத்தங்களைப் பரிசோதனை செய்ய உதவுகின்றது. பத்துலட்சம் அமெரிக்கர் நீரிழிவுரோகம்தங்களுக்கு இருப்பதை அறியாமலிருப்பதாக மதிப்பிடப்பட்டதிலிருந்து அமெரிக்க ஐக்கியதேசத்திலே இதைக் கண்டறிவது ஓர்விசேஷப்பட்டவேலையாயிற்று. இந்தரோகம் அதிகம்இலகுவில் குணமாகத்தக்க ஆரம்பநிலையில் இருப்பதைக்கண்டறிய இந்தக்கருவி அதிகம் பயன்படுகிறது. இது 53 றாத்தலே பாரமுள்ளது.

## ஸ்பெயினின் எதிர்காலம்

ஸ்பானிய அரசாங்கதலைவரான ஜெனறல் பிறாங்கோ அவர்களுக்கு இன்று 58 வயசு நடக்கின்றது. அதனால் அவர் இன்னும் எத்தனை வருடகாலம் தமது பதவியில் அமர்ந்திருப்பார் என்றகேள்வி எழுவது அதிசயமன்று. அவர் இன்னும் சிலவருடகாலம் தம்பதவியிலிருந்து வருவாரெனவும், பின்னர் தாம் வகித்துவரும் பிரதமமந்திரி பதவியை மற்றொருவரிடம் கையளித்துவிட்டு அதன்மேல் அரசாங்கதலைவராகமட்டும் இருந்துவருவாரென்றும் சொல்லப்படுகிறது. அல்போன்சோ அரசரினிடமாக ஸ்பானிய சிம்மாசனத்துக்கு உரிமை பாராட்டிவருகின்ற தொன்ஜுவான் இளவரசர் தமது மூத்தபுதல்வரும், 13 வயசுடைய அழகிய இளைஞருமான ஜுவான்சாள்ஸ் இளவரசருக்குச் சாதகமாகத் தம்முடைய உரிமைகளைத் துறந்துவிடவேண்டுமெனப் பிறாங்கோ விரும்புவதாகத் தெரியவருகிறது. இந்தச்சாள்ஸ் இளவரசர் 30 வயசுடையவராய் இருக்கும்போது 1968-ம்ஆண்டிலே 'புதிய ஸ்பானியா'வின் அரசராகும்படி அவர் நன்கு கல்வியூட்டப்பட வேண்டுமென்பதே அவருடைய கருத்தாகும். வெறும் பெயரளவில் "வேர்சேலிஸ் அரசர்" போல இளவரசர் இருப்பதைத் தாம் விரும்பவில்லையென்று அவரே தெளிவாகக் கூறியிருக்கின்றார். ஜுவான் சாள்ஸ் இளவரசர் அரசராக விரும்புவாரானால் இன்றைய ஸ்பானிய புவர்கள்மத்தியிலே நெடுங்காலம் பயிற்சிபெற்றும், கல்விபயின்றும் இருக்க இருக்கவேண்டும் என்பதே அவரின் தீர்மானம். அங்ஙனமாக, ஜெனறல் பிறாங்கோ காத்திராப்பிரகாரம் மரணத்திரையில் மறைவாரானால் முடிவென்ன ? அதற்கும் அவர் தமதிடமாக அரசியலைக்கொண்டு நடத்தக்கூடிய ஒருவரைத் தெரிந்தெடுத்து அவரைப்பற்றித் தம்முடன்நெருங்கிய அதிகாரிகளுக்குத்தெரிவித்திருக்கின்றாராம். இவர் 54 வயசுடையவரான ஜெனறல் கார்சியா-வலினோ என்பவரே. ஸ்பானிய உள்நாட்டு யுத்தத்தின்போது இவர் ஓர் ஜெனறலாயிருந்து கம்யூனிஸ்தபடைகளைச் சண்டவேகத்துடன் எதிர்த்துப் போராடிப் புறங்காட்டச்செய்து பிரதாபம்பெற்றவர். தற்போது ஸ்பானிய மொறக்கோவிலே இவர் ஹைகம்மிஷனர் பதவிவகித்திருக்கின்றார்.

## சுற்றுப்பிரயாணம்

28. 9. 51. வெள்ளியன்று மன்னார், நல்லாயன் ஆண்பாடசாலை ஆசிரியர் அறுவரும், மாணவர் இருபத்திருவரும் ஓர்தனிவாகனத்திலே மாலை 3 மணிக்குப் பாடசாலையிலிருந்து புறப்பட்டு, மதவாச்சி, றம்பாவைவழியாக மிகுந்தலைசென்று அங்கே இரவைக் கழித்து, மறுநாள்அதிகாலை கல்குளம், மருதங்கடவல, கெக்கிரியாவை, தம்பளைவழியாக மாத்தளைசேர்ந்து, அங்கிருந்து கண்டிக்குப் பயணமானோம். வழியிலே தேயிலைத் தோட்டங்கள், தொழிற்சாலைகளைக் கண்ணுற்று, கண்டியைச்சேர்ந்து போகாம்பரைவாவி, தாலதமாளிகை, சந்தைமுதலிய வற்றைக் கண்டுகளித்தோம். அங்கு ஐக்கியதேசியக் கட்சிமகாநாடு நடந்தமையால் பச்சைஉடைகள்அணிந்த ஆண்பெண்பாலாரால் வீதிகள்கடைகள் யாவும் தேங்கியிருந்தன. பின்புபேராதனையிலுள்ள மாதிரித்தோட்டத்தைப் பார்வையிட்டபின் அழகிய மகாவலிகங்கை செங்கல்நிறநீரோடு சலசலென ஓசையிட்டுச் செல்வதைத் தொங்குபாலத்திலிருந்து கண்டுகளித்தோம். அதன் அண்மையில்இருந்த பல்கலைக்கழகக் கட்டிடம் எம்மைப்பரவசமாக்கியது.

மாலையில் மாத்தளைக்குமீண்டு இராவேளையை அங்குபோக்கி மறுநாள்அப்பட்டினத்தைச் சுற்றிப்பார்வையிட்டுத் தம்பளைக்குப் புறப்பட்டோம். மாத்தளைப்பகுதியிலே உயரமானபாகங்களில் தேயிலை செய்கைபண்ணப்பட்டிருப்பதையும் சற்றுப்பதிவானதரைகளில் கொக்கோவா, றப்பர், காப்பி பயிரிடப்பட்டிருப்பதையும் பார்த்துக் கற்றதை நினைவுறுத்தினோம். பெருந்தேசப்பரப்பில் கொக்கோவாவே பயிரிடப்பட்டிருந்தது. நண்பகல் தம்பளையையடைந்து மலைக்குச்சென்று அதனைப் பார்த்துப் பிரமிப்படைந்தோம். பெரிய மலை ஐந்துஇடங்களில் குடைந்தெடுக்கப்பட்டு உள்ளே கன்மலையிலேயே சிலைகள் செதுக்கப்பட்டிருக்கின்றன. மாத்திரைற்செய்த சிலைகளுமுண்டு. மிகப்பெரிய புத்தர்சிலையொன்று மரித்த சாயலாகச் செதுக்கப்பட்டிருக்கிறது. குகையின்மேற்பாகத்திலே அந்நாளில் வரையப்பட்ட சித்திரங்களும், தீட்டப்பட்டவர்ணங்களும் எமக்குவியப்பை உண்டுபண்ணின. இவைகளைவெளிச்சங்கொண்டே பார்வையிட்டோம். பாண்டியர்அறுவரால் துரத்தப்பட்ட வாலகம்பாகு பதினாறுவருடங்கள் அலைந்து திரிந்தபோது இக்குகைகளில் தங்கினான்என்றும், இரண்டாம்முறை பட்டத்துக்குவந்தபோது தன்வாக்குப்படி இவ்விகாரைகளைக் கட்டினான்என்றும் சரித்திரம்கூறுகின்றது.

பின்னர்அங்கிருந்தும்புறப்பட்டு இனமலாவவழியாகச் சிகிரியாவைஅடைந்து பார்வையிட்டோம். அங்கு ஆக்கவேலைகள்பல நடைபெறுகின்றன. காசியப்பனை நினைவுறுத்தியது இக்குன்று. அங்கிருந்து இனமலாவ, கபறணை, மருதங்கடவல, கல்குளம் வழியாக இரவு மிகுந்தலையைஅடைந்தோம். மறுநாள் சூரியோதயத்தில் மிகுந்தலை மலைக்குச்சென்று விகாரைகள், மிகுந்தன் தங்கியிருந்தஇடம்(மிகிந்கொகா) நாகபொக்கணை, கழுதையபொக்கணை முதலியவற்றைப் பார்வையிட்டுத் திரும்பிக் காலைஅநுராதபுரிக்குப் பயணமானோம். அங்குருவனைவீவா, திசவீவா, அபயவீவா, அபயகிரிசமாதி, தூபாராம சமாதி, றூவான்வலைச்சமாதி, மிரிசுவேதியை, இசுறுமுனிவிகாரை, மகாமேகநந்தவனம், நூதனசாலை, சந்தை, மறியல்வீடு, புதியநகரம் முதலாம் இடங்களைக் கண்டுகளித்து மாலைமூன்று மணியளவில் எம்மூர்திரும்பி இல்லம் சேர்ந்தோம். எமதுபயணத்தில் அருந்துணைபுரிந்த அன்பர்கள் யாவருக்கும் எம்நன்றி உரித்தாகுக.

—ஓர்மாணவன்

## புதுமணத் தம்பதிகளுக்கு வரவேற்பு

முல்லைத்தீவைச்சேர்ந்தசிலாவத்தை, அர்ச். இசிதோர்தோட்டக் கணக்கராகக் கடமையாற்றிவருகின்ற திரு. அந்தோனிப்பிள்ளை விக்றர் பீலிக்ஸ் அவர்கள் தமதுதிருமணத்தின்பின் சென்ற 29-9-51 சனிக்கிழமைபிற்பகல் தமது பாரியாராகிய, நுங்குவில் தோட்டக் கணக்கர் இன்னாசிமுத்து அவர்களின் சிரேஷ்டபுத்திரி திருமதி மேரியோசேப்பின் இராசமலருடன் இங்குசமுகமளித்தபோது, இவ் வூரவர்களும், தனியூற்று முஸ்லீம் சகோதரரும், தோட்டப்பணியாளரும் ஒருங்குசேர்ந்து மேற்படிதோட்டவாயிலில் காத்திருந்து அவர்களைவரவேற்றார்கள். அத்தருணம்மேற்படிதோட்டத்தில் 25வருடகாலம் திறமையாகத்தொண்டாற்றித் தற்போதுஇளைப்பாறியிருக்கும் சில்லாலை, சந்தியாப்பிள்ளை அந்தோனிப்பிள்ளைக் கணக்கர்அவர்களால் புஷ்பாரங்கள் சூட்டப்பெற்றுப் புதியதம்பதிகள் நாதசுரவாத்தியங்களிசைக்க, தீபாலங்காரங்களுடனும், சிலம்படி, கோலாட்டம் முதலிய சிறப்புகளுடனும் ஊர்வலமாக ஒருமைல்நீளமான பெருந்தெருவூடே அழைத்துச்செல்லப்படும் வழியிலே தனியூற்று, முஸ்லீம்சகோதரர்களால் அமைக்கப்பெற்ற அலங்காரப்பந்தரிலே புஷ்பாரங்கள்சூட்டிச் சிறப்பாக உபசரிக்கப்பெற்றார்கள். அங்கிருந்து சிலாவத்தைஊர்வாசிகளாலே அமைக்கப்பட்டபந்தருக்குச் சிறுவர் சிறுமிகளால் நடிக்கப்பெற்ற நடினங்களுடனும், நடத்தப்பட்டகோலாட்டங்களுடனும் அழைத்துக்கொண்டு போகப்பட்டுப் புஷ்பாரஞ்சூட்டி வரவேற்கப்பட்டார்கள். ஊர்வலம் சிலாவத்தைத்தோட்டத்தை அடைந்ததும், தோட்டப்பாதுகாவலராம் அர்ச். இசிதோர்முனீந்திரனின் ஆலயத்தையடைந்து காணிக்கைகள் சமர்ப்பித்தபின் தோட்டத்தின்மத்தியிலே சித்தஞ்செய்யப்பட்டிருந்த அலங்காரப்பந்தலில் புதியதம்பதிகள் உயராசனத்தில் அமரவே தோட்டப்பணியாளரால் புஷ்பாரங்கள்சார்த்தி, அன்பளிப்புகள் வழங்கப்பெற்றார்கள். சிற்றுண்டிவகைகள், லகுபானவகைகள் யாவருக்கும் நன்குபரிமாறப்பட்டன. அத்தருணம் புதியதம்பதிகளின் குடும்பவிசேஷங்களையும், குணவிசேஷங்களையும் எடுத்துப்பாராட்டி மாஜிகணக்கர் சந்தியாப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை சொற்சுவை, பொருட்சுவைசெறிந்த ஓர் சொற்பொழிவு நிகழ்த்தினர். ஈற்றில், மணமகளின் மனமார்ந்தநன்றியுரையுடனும், சம்பிரமவிருந்துடனும் வரவேற்புவிழா இனிதுமுடிவெய்தியது. இப்புதியகுடும்பமானது அஷ்டஐசுவரியங்களும் குறைவறப்பெற்று இனிதே வாழ எல்லாம்வல்லஇறைவன் அருள்புரிவாராக.

—நிருபர்.

—சனநாயக சுதந்திரநாடுகளுக்கும் சர்வாதிகார கம்யூனிஸ்தநாடுகளுக்குமிடையே யுத்தம்மூண்டுகொள்ளுமிடத்து, இந்தியா சனநாயகநாடுகளையே ஆதரிக்குமென்று அகில-இந்திய பத்திரிகைஆசிரியர்களின் மகாநாட்டுப் பிரதமகாரியதரிசியான திரு. ஏ. டி. மணிஅவர்கள் நியூயோர்க்நகரில் பேசியபோது தெரிவித்திருக்கின்றார்.

—கர்ப்பத்திலிருக்கும் குழந்தை ஆணா பெண்ணாஎன்பதை அறிந்துகொள்ள ஜேர்மன் டக்றர்ஒருவர் புதுவழிஒன்றைக் கண்டுபிடித்திருக்கிறாராம். கர்ப்பிணியின் வலதுகண் இடதுகண்ணைப்பார்க்கிலும் அதிகம் இரத்தத்துடனிருந்தால் ஆண் குழந்தை பிறக்குமென்றும், மாறாயிருந்தால் பெண்குழந்தை பிறக்குமென்றும் அவர்கூறுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர் பக்கம்

## அண்ணு சொல்லுகிறுர்

தம்பி, தங்கச்சீமார்களே!

போனகிழமை பாலர்பக்கத்தைக்கண்டு நீங்கள் ஆச்சரியப்பட்டதாகக் கேள்வி. மேற்றிராணிஆண்டவர் உங்களுக்கு அருமையான புத்திமதிகளை எழுதிஇருந்தார். வல்லபமுள்ள செபம் என்றதில தாத்தாவுடைய நல்வார்த்தைகளைக் கேட்டீர்கள். 'குழந்தைநித்திரை' என்றபாட்டைப் படித்தீர்கள். இனிமேல் சின்னத்தம்பி தங்கச்சிமாரை நித்திரையால் எழுப்பிக் குழப்படி செய்யாதேயுங்கள். கதைகள், நொடிகள், பாட்டுக்கள், இப்படி விதம்விதமான எத்தனையோ விஷயங்களை உங்களுக்குத் தயார்செய்து தருவேன். படித்துப்பாருங்கள்! எல்லாரும் சுகமாய் இருக்கிறீர்களா?

உங்கள் அன்பான,
'அண்ணு'

## தேக்கமரமும் தேன்புல்லும்

ஓர் ஆற்றங்கரையில் தேக்கமரம் ஒன்று வானத்தைநோக்கி வளர்ந்திருந்தது. அதன் அடியில் தேன்புல்லு முளைத்திருந்தது.

தேன்புல்லில் வைரம்இல்லை. அது காற்று அடிக்கிற பக்கத்துக்குச் சாயும்; தேக்கமரமோ காற்று எவ்வாறு பலமாய் அடித்தாலும் அசையாது நிற்கும்.

அவ்வூர்க்கோவிலில் ஓர்கொண்டாட்டம். கொடியேற்ற ஓர்மரம் தேவையாய் இருந்தது. ஊரவர் நல்லநேரிய நெடுமரம் எங்கு உள்ளதெனத் தேடினர்கள். ஆற்றங்கரைக்கு வந்தார்கள். வானேங்கி நின்ற அம்மரத்தைக் கண்டார்கள். அதுவே தங்கள் தேவைக்கு ஏற்றதெனக்கண்டார்கள். உடனேமரத்தின் அடியைச் சுற்றிநின்ற தேன்புல்லைச் செதுக்கி எறிந்துவிட்டுத் தேக்கமரத்தைத் தறித்துச் சந்தோஷத்துடன் தங்கள் கோவிலுக்கு எடுத்துச் சென்றூர்கள்.

அந்தமனிதர் புல்லைச் செதுக்கிவிட்டுத் தேக்கமரத்தைக் கொண்டுசென்றது ஏன்? தேக்கமரத்தில் வைரம் இருந்தபடியால்அல்லவா? அதுபோல் நாமும் இவ்வுலக சீவியத்தில் நன்மை அடைய விரும்பினுல், நன்மைசெய்ய விரும்பினுல் மனத்தைரியம் உடையோராய் இருத்தல் வேண்டும். மனப்பெலன் இன்றி, மனவைரம் இன்றி நன்மைசெய்ய முடியாது. உலகத்தில் பலர் நன்மைசெய்ய விரும்புகிறுர்கள். ஒருகாரியத்தைச் சாதிக்க விரும்புபவர்கள் அதைச்செய்யத் தொடங்கிச் சற்றே கஷ்டத்தை, எதிரிடையை, இடையூறுகளைக் கண்டால் மனம் சோர்ந்து தொடங்கிய காரியத்தை நிறைவேற்றுது கைவிட்டு விடுவர்.

நாம் அப்படி இருக்கக் கூடாது. எங்கள் படிப்பிலோ, விளையாட்டிலோ, வேலையிலோ நன்மை அடைய விரும்பினுல் மனத்திடன் கொண்டு முயற்சி செய்வதுஅவசியம். ஒருமுறை, இரண்டு முறை மாத்திரமல்ல, ஒருநாள், இரண்டுநாள் மாத்திரமல்ல எப்போதும் முயற்சிசெய்ய வேண்டும். மனவலிமை இருந்தால் எப்போதும்வெற்றிஅடைவோம். உலக விஷயங்களிற்போல் ஆத்தும விஷயங்களிலும் மனவலிமை அவசியம். யேசுவைநேசிக்க, அவருடையசீவியத்தைப் பார்த்து நடக்க, எங்கள்ஆத்துமத்தை இரட்சிக்க நாம் ஆசைப்படுகிறூம். ஆனுல், அதற்காக மனவலிமை கொண்டு முயற்சிப்பதுஇல்லை. அப்படிப்பட்ட முயற்சி இல்லாவிடில் கடைசியாக அனுகூலம் அடையமாட்டோம். மன உறுதி உள்ளவர்களே சம்பாவனை அடைவார்கள்.

## அர்ச். பிரான்சிஸ் போர்ஜியார்

அர்ச். பிரான்சீஸ் போர்ஜியார் ஸ்பானியதேசத்தவர். வாலிபனுன பிலிப்பு ஸ்பானிய தேசத்து இராசா. இசபெல்லா இராணி. பிரான்சீஸ் போர்ஜியார் மந்திரி. விசுவாசம் நிறைந்தவர். வேட்டையில் சிறந்தவர். திருச்சபையையும், குருமார், சந்நியாசர், வறியவர்களையும் மிகவும் நேசித்தார். இராச்சியத்தை நீதியுடன் பரிபாலிக்க அரசனுக்கு நல்ல ஆலோசனை கொடுத்து வந்தார்.

அரசனுன பிலிப்பு சத்துராதிகளுடன் போராடப் போயிருந்த பொழுது, அரசி வருத்தமுற்றுள். எவ்வித சிகிச்சைக்கும் குணமாகாது இறந்தாள். இறந்த அரசியின் சடலத்தை இராசதானிப் பட்டணமாகிய கிறனடாவுக்குக் கொண்டுவர வேண்டியிருந்தது. அந்தக்கடமையைப் பிரான்சீஸ் போர்ஜியாரே நிறைவேற்ற வேண்டியவர் ஆனுர். அழகிய பேழையில் அச்சடலத்தை வைத்துக் கிறனடாவுக்குக் கொண்டு வந்தார்கள். அரச சமாதியில் அதை இட்டு மூடுமுன் அது அரசியின் உடல்தான் என்று நிச்சயப்படுத்த வேண்டியிருந்தது. அப்பொழுது சவப்பெட்டியைத் திறந்தார்கள். ஒரே துர்நாற்றம். இவளை ஒத்த அழகி இல்லையென்று போற்றப்பட்ட இசபெல்லா அரசியின் செத்த சடலம் உருவம்கெட்டுப் புழுத்து ஊனம் வடிந்துகொண்டு இருந்தது. அந்தக் காட்சி போர்ஜியார் பிரபுவின் மனத்தில் நன்றுய்ப் பதிந்தது.

உலகம், சரீரம் இவைகள் தரக்கூடிய இன்பம் யாவும் நிலைஅற்றவை.; நீரில் உண்டாகும் குமுழி போலவும், ஆகாயத்தில் தோன்றிமறையும் மின்னலைப் போலவும் மறைந்துபோகும் என்பதை உணர்ந்தார். உணர்ந்து உலக இன்பத்தைக் கைவிட்டார். சந்நியாசம் புகுந்து யேசுசபையில் ஒரு குருவானுர். சிலகாலம் அச்சபையின் தலைவருமாய் இருந்தார்.

## காலையில்

1

காலையில் எழுந்திடுவோம்—எங்கள்
கடவுளின் மலரடி தொழுதிடுவோம்

2

பாட்டுகள் படித்திடுவோம்—எங்கள்
பைந்தமிழ் மொழிகளைப் பயின்றிடுவோம்

3

கோயிலில் கும்பிடுவோம்—கடவுள்
குழந்தை என்றுல் அன்பு கொண்டிடுவார்

4

கூட்டமாய்ச் சேர்ந்திடுவோம்—சின்னக்
குருவிகள் போலே திரிந்திடுவோம்

5

புனிதமாய் நடந்திடுவோம்—எவரும்
புண்பட ஒருகுறை நாம்புரியோம்

—அமுது.

## அதிகாரம்

தந்தைசந்தனம் தன்மகள்மீனுவுக்கு ஒருசதுரநாள்கொப்பி வாங்கிக்கொடுத்தார். அதன் மேலட்டையில் அரச தம்பதிகளின் படம் அச்சிடப்பட்டிருந்தது. "இது யாருடைய படம் அப்பா?" என்றுகேட்டாள் மீனு.

சந்தனம்—இது நம்மைஆளும் அரசரும், அரசியும் கண்ணே!

மீனு—அரசர்என்றுல் அப்பா?

சந்.—அரசர்என்றுல் நம்எல்லோருக்கும் பெரியவர்.

மீனு—அப்படியென்றுல் அப்பா, அவர் எழும்பிநின்றுல் தலை முகட்டில் முட்டுமோ?

சந்.— அப்படியல்ல மீனு. பெரியவர்என்றுல் அவர்சொற்படிதான் நாம் எல்லோரும் நடக்கவேண்டும்.

மீனு— இது என்ன, அப்பா இது. அவர்சொல்லுமட்டும் நாம் நடக்கப்படாதோ? எல்லோரும் அவர் சொல்லித்தான் நடக்கத் தொடங்கினுர்களோ?

சந்.— இல்லையடி கண்ணே! நாம் என்னென்ன காரியங்கள் செய்யலாம், என்னென்ன காரியங்கள் செய்யக்கூடாது என்று அரசர் கட்டளை இடுவார். நாம் அதற்கு அமைந்து நடக்க வேண்டும்.

மீனு— ஒகோ விளங்கிவிட்டது அப்பா. அவர்தான் கடவுள் என்று சொல்லுங்களேன்.

சந்.—இல்லை, இல்லை, மீனு. கடவுள் அரசர்கள் எல்லாருக்கும் அரசர். கடவுள்தான் அரசர்களையும் படைத்தவர். கடவுள் நமதுகண்களுக்குத் தெரியமாட்டார். அவர் தம்முடைய அதிகாரத்தை உலக அதிகாரம், ஞான அதிகாரம்என இரண்டாகப் பிரித்து, உலக அதிகாரத்தை அரசரிடமும், ஞான அதிகாரத்தைத் திருச்சபையிடமும் தந்திருக்கிறுர். ஆகையால், அரசர் கடவுளின் கையாள்.

மீனு—அப்பா நாம் அரசருக்கு அமையாவிட்டால்!

சந்.—அரசருக்குக் கடவுள் நம்மை ஆளும்படி அதிகாரம் கொடுத்து இருக்கிறுர். கடவுள் அதிகாரம் கொடுத்து இருக்கிறபடியால் நாம்அவருக்கு அமையத்தான் வேண்டும். சரி மீனு, பாடசாலைக்குப்போக நேரம் ஆகிறது. போய் ஆயத்தம் செய்.

மீனு—போய் வருகிறேன் அப்பா.

## மூத்தோர் வார்த்தைகள்

1

நாய் வாலைத் தொட்டால் கடிக்கும்
கெட்ட நூலைத் தொட்டால் கெடுக்கும்

2

எறும்பைப்போல் ஊக்கமாய் இரு

3

ஏழைக்கு இரங்கு

4

உனது உள்ளம் கடவுளின் கோயில்

5

பெரியார் மனது நோக நடவாதே

### ஒரு கணக்கு.

அன்று கரும்பலகையில் 9, 9, 9. என்று மூன்று ஒன்பதுகள் குறிக்கப்பட்டு இருந்தன. அருள் என்ற பையன் அவற்றை உபயோகித்துப் பின்வரும் விடைகளை எழுதினுன்.

(1) 9
(2) 10
(3) 27
(4) 72
(5) 90
(6) 729

இவ்விடைகள் அவனுக்கு எப்படிக் கிடைத்தன என்று கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.

—யப்பானிலே அணுக்குண்டுவீசப்பட்ட நகர்களில்ஒன்றுகிய ஹிரோஷிமாவிலே இற்றைக்கு ஆறுவருடங்களின்முன் 120 கத்தோலிக்கர்இருந்தவிடத்திலே தற்போது 1,200 பேர் இருக்கின்றுர்களென்று அந்நகரிலே புதிதாய்க்கட்டப்பெற்ற சமாதான ஞாபகஆலய திறப்புவிழாவின்போது அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதாவது அவர்களின் தொகை நூற்றுக்குத் 900 வீதம் அதிகரித்துள்ளது.

## அரிசியும் சீவசத்தும்

வைற்றமின் B–எனும் சீவசத்து நெல்லரிசியுடன் சேர்க்கப்படுமாஞல் நெல்லரிசியே பிரதானஉணவாக இருந்துவருகின்ற நாடுகளிலே லட்சக்கணக்கான சனங்களைச் சீவமோசங்கள், பிற நோய்களிலிருந்து வருடந்தோறும் காத்துவைக்கமுடியுமென்று ஓர் அமெரிக்க இரசாயனியான டக்றர் றெபேட் வில்லியம்ஸ் கூறுகின்றுர். இந்த B–என்ற செயற்கைச் சீவசத்தை முதன்முதலாகக் கண்டுபிடித்துக் கலவை செய்த முதல் விஞ்ஞானி இவரே. வருடம்ஒன்றுக்கு ஒரு ஆளுக்குப்போதிய அரிசியை 35 சதச்செலவுடன் இந்தச் சீவசத்தைச்சேர்த்து வளப்படுத்த முடியுமென இவர் கூறுகின்றுர்.

ஆசியாவிலே அரிசி விளைவிக்கப்படும் பிரதானநாடுகளிலெல்லாம் இவர் சமீபத்திலே சுற்றுப்பிரயாணஞ்செய்து இந்தச்சீவசத்துக்கொண்டு அரிசியை வளப்படுத்தும் ஓர் திட்டம்பற்றி அந்தந்த அரசாங்கங்களுடன் ஆலோசித்திருக்கின்றுர். உணவிலே B– என்ற சீவசத்துக்குறைவால் உண்டாகின்ற 'பெறிபெறி'.என்றநோயைப் போக்குவதில் இது பெரும்உதவியாகுமென்றும், இந்தநோய் விசேஷமாய்க் குழந்தைகள்மத்தியிலே உயர்ந்த மாணவிகிதத்தை உண்டுபண்ணுகிறதென்றும் இவர் தெரிவிக்கின்றுர். இதுகொண்டு வளப்படுத்தப்பெற்ற அரிசிப்பாவனை முதன்முதலாக 1948-ம்ஆண்டு பிலிப்பைன்ஸ்நாட்டைச்சேர்ந்த பாட்டான் எனுமிடத்திலே பெரும்அளவில் பரக்க உபயோகிக்கப்படலாயிற்று.

பின்னர் 1951-ம்ஆண்டு சித்திரை 1-ந்திகதிவரையில் அப்பகுதியிலே 'பெறிபெறி' நோயால் ஒரு மரணந்தானும் ஏற்படவில்லையென்று அறிக்கையிடப்படலாயிற்று. 1948-ம்ஆண்டுக்குமுன் இந்தநோயினுல் அப்பகுதி உலகில்அதிகங்கூடிய மாணவிகிதத்தைக் கொண்டவைகளில் ஒன்றுயிருந்தது. பிலிப்பைன்ஸ் சட்டசபையானது அரிசியுடன் இந்த B– எனும் சீவசத்தைக் கலக்கும்படியாக அந்நாட்டிலுள்ள 5,500 அரிசி மில்களுக்கும் அதனை வாங்கி உதவும்விஷயமாய் இப்போது ஆலோசனைசெய்து வருகின்றது. இது செய்யப்படுமாஞல் 'பெறிபெறி' என்ற கொள்ளைநோய் பிலிப்பைன்ஸ் தீவுகளிலேமுற்றுகஒழிக்கப்பட்டுவிடுமென்று டக்றர் வில்லியம்ஸ் கூறுகின்றுர்.

—அமெரிக்க ஐக்கியதேச கிளிவ்லண்ட்நகரிலே காள் பிறவுண் என்ற வாலிபவிஞ்ஞானிஒருவர் கட்டிடங்களிற்செய்யப்படும் சித்திரவிந்தாரிப்புகள் பட்டையாகஉரிவதையும், அவைகள் கொப்புளிப்பதையும்தடுக்கக்கூடிய ஓர்சாதாரண முறையைத் தனது ஆராய்ச்சியிலே கண்டறிந்திருக்கின்றுர். அற்பசெலவோடு இதனைப்பிரயோகிக்கலாமாம். அவர்இதற்கென்று "சுவர்சுவாசிகள்"எனும் ரியூப்புகளைச் செய்திருக்கின்றுர்.

—நியூயோக்நகரிலே அலுமீனியங்கொண்டு கார்எஞ்சின்ஒன்று கட்டப்பட்டுச் சமீபத்திலே அது வீதிப்பரிசோதனைநடத்தப்படவிருக்கிறது. இது வழமையான கார் எஞ்சின்பாரத்தை அரைவசிக்கு அல்லது அதற்குமேல் குறைத்துவிடுமென மதிப்பிடப்படுகிறது. நான்குவருட ஆராய்ச்சியின்பின் அங்கு ஹென்றி கெய்சரின் தொழிற்சாலையில் இது கட்டப்படலாயிற்று.

—பிரான்சிலே லையன்ஸ்நகரில் சர்வதேச வெட்டுமரப் பொருட்காட்சி ஒன்று நடைபெற்று வருகின்றது. இதிலே பிரான்சிலும், அதன் குடியேற்றநாடுகளிலுமுள்ள சகலவிதமான மரங்களுங்கொண்டு கட்டப்பெற்ற கோவில்ஒன்று மத்தியதானம்பெற்று விளங்குகின்றது. காட்சிநடைபெறும் கிராமமும் முற்றுக மரங்கொண்டே அமைக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## CEYLON GOVERNMENT RAILWAY

### Level Crossing Repairs

The following Level Crossings will be closed to vehicular traffic during the periods stated, for effecting repairs :—

**(1) Serpentine Road Level Crossing at 1 mile 61 chains 50 links between Baseline Road and Cotta Road Railway Stations :—**

Partially closed from 7-0 a.m to 12 noon on Sunday, 14-10-51.

Road traffic can be diverted through Cattle Mart Road and Blake Road respectively.

**(2) Galle Wakwelle Road Level Crossing at 72 miles 50 links between Galle and Talpe Railway Stations :—**

Closed from 9-0 p.m. on Saturday, 13-10-51 to 3-0 a.m. on Sunday, 14-10-51.

Road traffic could be assisted over the Level crossing subject to little delay.

**(3) The Level Crossing at 24 miles 41-46 chains Chilaw Line between Negombo and Kochchikade Railway Stations :—**

Partially closed from 10-0 p.m. to 11-0 p.m. on Saturday 20-10-51 and from 1 0 a.m. to 6-0 a.m. on Sunday, 21-10-51.

Fraffic will be assisted over the Crossing.

Totally from 11-0 p.m. on Saturday, 20-10-51 to 1-0 a.m. on Sunday, 21-10-51.

During the period of Total closure traffic may proceed via Negombo-Chilaw Road and Negombo-Kattuwa Road.

## நல்ல ஒரு பிரசங்கம்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பும்படியாக எல்லாரும் பிரயாசைப்பட வேண்டுமென்று பங்குசசுவாமியார் எத்தனையோ முறை சொல்லியிருந்தார். உபயோகமற்ற கருவியென்று கருதப்பட்ட வியாதிக்காரச்சுவாமியாரின்பிரசங்கத்தினால் இந்த ஆத்துமம் தனதுசிருட்டிகரிடம் கொண்டுவரப்பட வேண்டுமென்பதுசர்வேசுரனின்சித்தம் போலும். அந்த மனிதர் மிகுந்த மனஸ்தாபத்தோடும், பிரலாபத்தோடும் தன்பாவங்களைச் சங்கீர்த்தனஞ்செய்து அதிகம் பயபக்தியுடன் மறுநாள் சற்பிரசாதம் அருந்தினார். தவருது ஒவ்வொருபிரசங்கத்துக்கும்வந்து எல்லாருக்கும் ஓர்முன் மாதிரியாக இருநது வந்தார். நானும் இதிலிருந்து சரியான பாடம்ஒன்று படித்தேன். பிரசங்கியார் வாய்ச்சாலமுள்ளவராயும் இருக்கலாம். உலகப்பிரசித்திபெற்றவராயும்இருக்கலாம். ஆனல், சர்வேசுரன் நம்முடைய அலுவல்களை ஆசீர்வதித்துப் பலன்கொடுக்க வேண்டும். "ஆண்டவர் வீட்டைக்கட்டச் சித்தமில்லாவிடில் அதைக்கட்டுகிறவர்கள் வீணாய் உழைக்கிறார்கள்:"

(சங். 126-1)

## நேர்த்தி அறிக்கை

திரு இருதயநாதரின் அதிஇரக்கத்தாலும், மாங்கை லூர்துமாதாவினதும், தள்ளாடி அர்ச். அந்தோனியாரினதும் விசேஷவேண்டுதலாலும் எனதுகண்டத்தில் உண்டுபட்ட கொடியநோய் குணப்பட்டுப் பூரணசுகம்கிடைக்கப்பெற்றேன். இன்னும்என்குடும்பத்திலுள்ள சகலரையும் யேசுவின் திருஇருதயத்துக்கு ஒப்புக்கொடுக்கின்றேன். மேற்கூறிய சுத்தவாளர்களின் நாமங்கள் உலகெண்டிசையும் இலங்குவதாக.

அந்தோனிப்பிள்ளை - மாகிறேற்
பாப்பாமோட்டை.

Mal. No. 507. Eng

## அனேப்பிலெஸ் குடும்பத்தை எதிர்த்து உலகமுழுவதும் ஓர் படையெழுச்சி

அனேப்பிலெஸ் குடும்பமானது உலக்சரித்திர வாலாறறிலே அறியப்படாததல்ல. இந்தத்தீமையை எதிர்த்துப் போராடுதற்கென உலகமுழுவதுமே சங்கங்களும், பந்துக்கட்டுகளும் ஆக்கப்பட்டுவரும் உண்மையிலிருந்து அதன்வல்லபம் தெளிவாகக் காண்பிக்கப்படுகிறது. சரியான கிரேக்க நாமத்துடன்கூடிய இந்தக்குடும்பமானது மனோராச்சியம்பண்ணுகிற சிலரின் மனோரூபீகரத்திலிருந்து பிரத்தியட்சமாகப் பிறக்கவில்லை, துர்அதிர்ஷ்டவசமாக மனோரூபீகரத்தின் கற்பனைகதையாக எவ்வகையிலும் இல்லாத இந்தக் குடும்பம் உண்மையாகவே இருந்து வருடந்தோறும் 30 லட்சம் சனங்களின் மாணத்துக்குப் பொறுப்பாளியாய் இருந்துவருகிறது. அதிகமாக மங்கியஒளியிலே அது வேலைசெய்கிறது. அதன் இரகசியவல்லபம் வெற்றுக்கண்ணால் பார்க்க முடியாத ஓர் விஷத்திலும், சனங்களின் அறியாமையிலும் தங்கியிருக்கிறது.

எப்படியிருந்தாலும் முந்திய நூற்ருண்டில் ஏற்கனவே அதன் இரகசியம் மனிதவர்க்கத்தின் பெரியபரோபகாரியான சேர் றெனல்ட் றெஸ் அவர்களால் கண்டுபிடிக்கப்படலாயிற்று. என்றலும் அதன் வல்லபத்தை முற்றுக முறியடித்துவிட முடிந்தபாடாயிருக்கவில்லை. அனேப்பிலெஸ்குடும்பம் ஏதேனுமொன்ருல் சுருங்குவதில்லை. தேசியஎல்லைகள் அதற்குச் சாதாரணமாக இல்லை. செல்வர்கள் அல்லது வறியவர்கள், வெள்ளையர்கள் அல்லது கறுப்பர்கள், ஆண்கள் அல்லது பெண்கள் எவருமே பாதுகாப்புடையோராயில்லை, அனேப்பிலெஸ் என்பது ஓர் நுளம்பு. ஓர் சர்வதேச நுளம்பு. இந்த அனேப்பிலெஸ் குடும்பத்தைச் சேர்ந்ததாய் நோய்நஞ்சினைத் தொற்றவைக்கும் நுளம்பு ஒன்று ஓர் மனிதனைக் கடிக்கும்போது அந்தமனிதன் மலேரியாக்கிருமியால் தொற்றவைக்கப்படுகின்ருன். இந்தவிதமாக 30 கோடி சனங்கள் வருடந்தோறும் பாதிக்கப்படுகின்ருர்கள்,

அதிர்ஷ்டவசமாக இந்தக்குடும்பத்தின் வல்லபத்தைக் கெடுத்து வோறுக்கக்கூடிய ஓர்மருந்து இருக்கிறது. தற்போது இல்லாதொழிந்த சர்வதேசசங்கத்தால் நியமனஞ் செய்யப்பெற்ற அதிகம்நிபுணத்துவம்வாய்ந்த மலேரியாக் கம்மிஷன் 1938-ம்ஆண்டு வெளியிட்ட அறிக்கையிலே மலேரியாவுக்கு ஓர் அவுஷதமாகக் குயினைன் சிபாரிசுசெய்யப்பட்டிருக்கிறது.


ஓர் பாதுகாப்பாகச் சுகக்கேடான காலமுழுவதிலும் தினமும் 6 கிறெய்ன் குயினைன் பாவித்துவாவேண்டுமென்று இந்தநிபுணர்கள் சிபாரிசுசெய்திருக்கிருர்கள். இன்னும் ஓர்கால் மலேரியா காணுமிடத்து அதற்கோர் மாற்று மருந்தாக 5 முதல் 7 தினங்களுக்குத் தினமும் 15 முதல் 20 கிறெய்ன் குயினைன் பாவித்துவாவேண்டுமென விதித்திருக்கின்ருர்கள்.

இந்தச்சிபாரிசைப் பின்பற்றுவதாலே எல்லைகளுள் மலேரியாவைக் கட்டுப்படுத்திவைக்கமுடியும். அதற்குப்பலியாகிற லட்சக்கணக்கானோரின் தொகை பதமையாக ஆனல் நிச்சயமாகக் குறைக்கப்படமுடியும்.

—நோர்வேதேசத்திலே ஒஸ்லோ நகருக்குச் சமீபமான ஸ்கிஎனுமிடத்தில் வைக்கோல்கொண்டு மரப்பலகைகள்செய்து அவற்றை வீடுகள்கட்ட உபயோகிக்கின்ருர்கள். இந்த வைக்கோற்பலகைகளை உபயோகிப்பதானது கட்டிடவேலைக்கென்று வழமையிலே தேவைப்படுகின்ற மரத்தில் நூற்றுக்கு 65 வீதம் போதியதாம்.

—யூதர்களின் இஸ்ருயேல் நாடு சென்ற 30-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை 5712-வது யூதவருடப்பிறப்பைக் கொண்டாடியது. கடந்த பன்னிரு மாசங்களிலும் அங்குபோய்ப் புதிதாகக்குடியேறிய சுமார் இரண்டுலட்சம் யூதர்களும் இஸ்ருயேல்நாட்டில்முதன் முறையாக அன்று புதுவருடப்பிறப்பைக் கொண்டாடியிருக்கிருர்கள்.


... நிம்மதியான நித்திரை






என்ன ஆச்சரியம்....இப்பொழுதெல்லாம் இராக்காலங்களில் நாங்கள் எழுந்திருப்பதே இல்லை. காரணம் குழந்தைக்கு லெக்டோஜன் உணவு கொடுப்பதுதான். தாய்ப்பாலில் உள்ள சத்துக்கள் பூராவும் லெக்டோஜனிலும் கிடைப்பதால் குழந்தை திருப்திபடைகிறது. மேலும் லெக்டோஜன் எழிதில் சீரணமாவதால், சீரணஉறுப்புக்கள் ஓய்வு பெற்றுக் குழந்தைக்கு நல்ல நித்திரையைக் கொடுக்கின்றன. ஆம். எல்லா இடங்களிலுமுள்ள தாய்மார்கள் இதை ஒத்துக்கொள்ளுகின்றனர்.........ஆகவே உங்கள் குழந்தைக்கு லெக்டோஜன் உணவு கொடுங்கள்.

லெக்டோஜன்

குழந்தைகளுக்கேற்ற சிறந்த உணவு.



## பிரதர் மருந்துகள்

ஒவ்வொரு ஊரிலிருந்தும் ஒரு பாட்ல் கோரோஜனை மாத்திரை, அல்லது ஒரு பாட்ல் விஷக்கடி மை அனுப்பும்படி கடிதங்கள் வந்துகொண்டிருக்கின்றன. கோரோஜனை பாட்ல் 0—5—0. தபால் ரிஜிஸ்தர் செலவு 0—10—0 ஆகிறது. ஆகையினல் ஒவ்வொரு ஊர்களிலும் ஒரு ஏஜெண்டு இருந்தால் இந்தச் செலவு ஏற்படாது. ஏஜெண்டுகளுக்குத் தக்க கமிஷன் கொடுக்கப்படும். விபரங்களுக்குக் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதுங்கள்.

பிரதர் கோரோஜனை பேதி மாத்திரை

32 மாத்திரைகள் கொண்ட பாட்ல் ... ... 0—5—0

பிரதர் கஸ்தூரி மாத்திரை

32 மாத்திரைகள் கொண்ட பாட்ல் ... ... 0—5—0

பிரதர் விஷக்கடி மை

எல்லா விஷங்களுக்கும், தர்கீர் சம்பந்தமான வியாதிகளுக்கும் உள்ளுக்குச் சாப்பிடக்கூடியது. பாட்ல் விலை ... 0—12—0

பிரதர் காலரா பவுடர்

பாட்ல் விலை ... ... ... 0—4—0

குறிப்பு :— உங்கள் வியாதிகளைத் தெளிவாய் எழுதி அனுப்புங்கள். வியாதிகளுக்குத் தக்க பஸ்பங்கள், சூரணங்கள், லேகியம் முதலியன செய்து அனுப்பப்படும். கடிதங்கள் எழுதும்போது விலாசம் தெளிவாய் எழுதுங்கள்.

பிரதர் T. தேவநேசன், R. I. M. P. (Regd.)

மாதா கோவில்,
ரயில்வே ரோடு,
கும்பகோணம்., S. I. Ry.


## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

யேசுவின் அதிஇரக்கத்தினலும், பரிசுத்தபாத்திமா இராக்கினியின் கிருபையினலும், அர்ச். அந்தோனியார், செபஸ்தியார், பிலோமினம்மாள், வேதசாட்சிகள், சகலஅர்ச்சியசிஷ்டர்கள் இவர்களின் மன்ருட்டினலும், யாவராலும் கைவிடப்பட்டு மரணப்படுக்கையில் கிடந்த எனதுதாயார் பூரணசுகம்அடைந்தனர். இவர்களுக்கு என்றும்ஸ்துதியுண்டாவதாக. நேர்த்தியின்படி இதைப் பிரசுரிக்கின்றேன்,

சேவற்பதி, மன்னர். எஸ். ஆரோக்கியம்.

Printed and Published for the Proprietor by BASTIAMPILLAI SANTIAGOEPILLAI residing at 39, Main Street, Jaffna, at St. Joseph's Catholic Press; Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday October 11 1951.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org